# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழுத் தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 14327 / 2009 / மசி. 8 நாள் : 22.12.2009**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 29.12.2009 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

22/12/09
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்
## டிசம்பர் 2009

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| **பொருளடக்கம்** | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | Jnnurm – கட்டுமானப் பணிகள் விலை விகிதம் - அரசு ஆணை வெளியிடப்பட்டது –பதிவு செய்தல் -தொடர்பாக |
| 2 | Jnnurm – பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - ஆர்.சி.சி. பாக்ஸ் கல்வெர்ட் அமைத்தல் - ரயில்வே துறைக்கு தொகை வழங்குதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 3 | Jnnurm – 47 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல் -இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 4 | Jnnurm – BSUP – பயனாளிகள் பட்டியல் - மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தல்-தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு -திடக்கழிவு மேலாண்மை – குறிச்சி முதலிய நகராட்சிகளில் சேகரமாகும் குப்பைகள் - வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - 11 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - ஒப்பந்த அடிப்படையில் சுகாதார பணியாளர் நியமனம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - 3 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - 1 அபிவிருத்திப் பணி செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - 7 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 12 | மேற்கு மண்டலம் - ஆர்.எஸ்.புரம் இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகம் - தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்தல் மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 13 | மேற்கு மண்டலம் - ஆர்.எஸ்.புரம் இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகம் - SJSRY மையம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 14 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - விளாங்குறிச்சி கிராமம் - க.ச.எண். 358/1- குடியிருப்புகளை வேறு இடத்திற்கு மாற்றி அமைத்தல் மற்றும் சாலையை நேர்செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 15 | நகரமைப்புப் பிரிவு -உள்ளாட்சிகளின் நிலை உயர்த்துதல் - 30 உள்ளாட்சிகளை மாநகராட்சியுடன் இணைப்பது – மாமன்றம் முடிவு செய்தல் -தொடர்பாக |
| 16 | கல்விப் பிரிவு - தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் மாநகராட்சி பள்ளிகள் - வாடகை செலுத்துதல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 17 | பணியமைப்பு - திருமதி விஜயலட்சமி, இளம் பொறியாளர் - சேலம் மாநகராட்சிக்கு மாறுதல் கோரியது - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 18 | பணியமைப்பு - மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கான வழக்கு கட்டண விகிதங்களை உயர்த்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 19 | பணியமைப்பு - திரு கே. மனோகரன், உதவி பொறியாளர் - சேலம் மாநகராட்சி – தொடர்ந்து பணிபுரிய அனுமதி கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **20** | பணியமைப்பு - பொறியியல் பிரிவு - தெருவிளக்குகள் பராமரித்தல் - உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் பணியிடம் தோற்றுவித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **21** | பணியமைப்பு - திரு ரவி, இளம் பொறியாளர், திருநெல்வேலி - கோவை மாநகராட்சிக்கு மாறுதல் கோருல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **22** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் - நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **23** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - டி.பி. ரோடு வணிக வளாகம்-ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ATM சென்டருக்கு - வாடகைக்கு விடுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **24** | வருவாய் பிரிவு - மேற்குமண்டலம் - மேட்டுப்பாளையம் சாலை - தியாகி குமரன் மார்க்கெட் - கடை ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **25** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **26** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் - வணிக வளாக கடைகள் - ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்தல் மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **27** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 57 – பூசாரிபாளையம் சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **28** | வருவாய் புரிவு - தெற்கு மண்டலம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்-தடம் எண் 2- மின்னனு விளம்பர பலகை அமைக்க மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இடத்தினை வாடகைக்கு விடுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **29** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - தியாகி குமரன் மார்க்கெட் உள்ளிட்டவை - உரிமம் புதுப்பித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **30** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - டவுன்ஹால் நவீன பொதுக் கழிப்பிடம் - பயன்படுத்தாமல் இருந்த 2 மாத காலத்திற்கான உரிமத் தொகை திரும்ப வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| **31** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - தமிழ்நாடு மின்சார வாரியம் (மெட்ரோ) அலுவலகம் மாற்றம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **32** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வணிக வளாகக் கடைகள் - உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **33** | கல்விப் பிரிவு - மாநகராட்சி இர.ச.புரம் மேற்கு ஆரம்பப்பள்ளி மற்றும் மாநகராட்சி கென்வின் நடுநிலைப்பள்ளி – அருகிலுள்ள பள்ளிகளுடன் இணைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| **34** | பொறியியல் பிரிவு - குடிநீர் கட்டணம் திருத்தி அமைத்தல் - குடிநீர் விநியோக வரைவு துணை விதிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **35** | வடக்கு மண்டலம் - 2010-11 புதிய குத்தகை இனங்கள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **36** | வடக்கு மண்டலம் - மாநகராட்சி கடைகளில் உடல் ஊனமுற்றோர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |

**இணைப்பு - 3**

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

**உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளிய துள்ளப் பெறின்.**

**(குறள் -540)**

**விளக்கம்**

**கொண்ட குறிக்கோளில் ஊக்கத்துடன் இருந்து அதில் வெற்றி காண்பதிலேயே நாட்டமுடையவர்களுக்கு அந்தக் குறிக்கோளை அடைவது எளிதானதாகும்.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

**பொருள் எண் 1**

உள்ளாட்சி துறையில் மேற்கொள்ளப்படும் திட்ட கட்டுமான பணிகளுக்கு பயன்படும் கட்டுமான பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களுக்கேற்ப ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் விலை மாறுதல் ஷரத்து ஏற்றம், இறக்கம் பொதுப்பணித் துறையில் வழங்கப்படுவது போல் உள்ளாட்சி துறை நிறுவனங்களிலும் வழங்கப்படலாமென அரசு ஆணை (எம்.எஸ்) எண்: 227, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள் 23.11.2009—ல் வெளியிடப்பட்டு, இவ்வரசாணை 14.03.2008—லிருந்து நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளதால் அதன்படி இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டபணிகள் / பொது பணிகளுக்கும் செயல்படுத்த அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:அரசாணையில் கண்டுள்ள உத்தரவுகளை இம்மாநகராட்சியில் மேற்கொள்ளும் திட்டபணிகள் / பொது பணிகளுக்கு செயல்படுத்த அரசாணையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 9190/02/ஜே.என்.5

மாநகர மன்ற தீர்மனம் எண் 140 நாள் 29.12.2009

அரசு ஆணை (எம்.எஸ்) எண். 227 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. 3) துறை நாள் 23.11.2009 ஐப் பதிவு செய்யவும், மாநகராட்சியில் நடைபெறும் பணிகளுக்கு அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 2**

கோவை மாநகராட்சி, தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அரசு ஆணை எண்.551(டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007—ல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதில் சிப்பம் (5) பணியான கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1100 முதல் 1500 எம்.எம் வரை எம்.எஸ். (MS) மற்றும் பி.எஸ்.சி. (PSC) குழாய் அமைத்தல் பணி மெஸ்ஸர்ஸ் நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், சென்னை என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணியில் வீரபாண்டிபிரிவு (LS 28.10கிமீ) தற்போதுள்ள கோவை – மேட்டுப்பாளையம் இரயில்வே இருப்பு பாதையினை கடக்க பில்லூர் திட்ட குடிநீர் பிரதான குழாய் பதிக்க வேண்டியுள்ளதால் (வளைவு எண் 6, கி.மீ. 16/700 – 800) இருப்புப் பாதையின்கீழ் இரயில்வே துறையால் ஆர்.சி.சி. பாக்ஸ் கல்வர்ட் (2500mm x 2000mm) அளவுள்ள பணியினை மேற்கொள்ளவும், பணி முடிவுற்றவுடன் கோவை மாநகராட்சி குடிநீர் பிரதான குழாய் பதிக்க அனுமதி வேண்டி கோட்ட மேலாளர், தென்னக இரயில்வே, சேலம் கோட்டம் அவர்களை கடந்த 18.03.09—ல் கோரப்பட்டது.

மேற்படி இடத்தை இரயில்வே துறையினர் பார்வையிட்டு ஆர்.சி.சி. பாக்ஸ் கல்வர்ட் திட்ட குடிநீர் குழாய் பதிக்கும் அளவிற்கு இரயில்வே நிர்வாகம் அமைக்க, மேற்படி துறையால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.65.00 இலட்சத்தினை மாநகராட்சி செலுத்த சம்மதம் கேட்டு இரயில்வே துறை 14.12.09—ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட தொகையினை செலுத்தி இப்பணியினை இரயில்வே துறையின் மூலம் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்தும், இப்பணி மேற்கொள்ளுவதற்குண்டான செலவினத்தினை பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :– வீரபாண்டி பிரிவு, கோவை – மேட்டுப்பாளையம் செல்லும் இரயில்வே இருப்புப் பாதையினை குடிநீர் திட்ட பிரதான குழாய் பதிக்க ஆர்.சி.சி. பாக்ஸ் கல்வர்ட் இரயில்வே துறையின் மூலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 65.00 இலட்சத்தினை இரயில்வே துறைக்கு மாநகராட்சி செலுத்த சம்மதம் தெரிவித்தும் மேற்படி செலவினத்தைப் பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4614 /08 / JN5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 141 நாள் 29.12.2009</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

கோவை மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் பில்லூர் குடிநீர் திட்டங்களிலிருந்து தினசரி கிடைக்கப்பெறவுள்ள 200 மில்லியன் லிட்டர் கொள்ளளவு குடிநீரினை கொண்டு 24 மணி நேரம் தங்கு தடையின்றி, சீரான குடிநீர் அனைத்து மாநகர பகுதி மக்களுக்கும் வழங்கும் பொருட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது, இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட். லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டப் பணியில் தற்போது செயல்பட்டு வரும் சிறுவாணி குடிநீரினை கொண்டு விநியோகம் செய்யப்பட்டுவரும் மாநகர பகுதிகளில் 25 எண்ணிக்கையிலான மேல் நிலைத் தொட்டிகள் (அல்லது) தரைமட்ட நீர்த் தேக்க தொட்டிகள் அமைந்துள்ள இடங்களும், பில்லூர் I குடிநீரினை கொண்டு விநியோகம் செய்யப்பட்டுவரும் மாநகர பகுதியில் 20 எண்ணிக்கையிலான மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ள இடங்களில் நீங்கலாக கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் உள்ள மனைப் பிரிவுகளில் உள்ள பூங்கா மற்றும் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்டு, மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் குடிநீர் மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த் தேக்க தொட்டிகள் அமைக்க மேற்படி நிறுவனத்தால் உத்தேசமாக வடிவமைக்கப்பட்டு, 4 மண்டலங்களிலும் சேர்த்து 47 எண்ணிக்கை கொண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பகுதியில் கூடுதலாக கட்டப்படவுள்ள 47 எண்ணிக்கை கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்க அதற்கான தேர்வு செய்யப்பட்டுள்ள மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு, பூங்கா காலி இடங்களில் அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | மனைப் பிரிவின் பெயர் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | நிலப்பயன்பாடு வகை |
|---|---|---|---|---|---|
| <u>வடக்கு மண்டலம்</u> | | | | | |
| 1 | பி.ஆர்.பி. கார்டன் | 1 | 81/1,2,3, 82/1,2,3, 83/1,2, 84 & 85 | கிருஷ்ணராயபுரம் | பூங்கா |
| 2 | அருங்கா நகர் | 3 | 234 | விளாங்குறிச்சி | பூங்கா |
| 3 | சுப்பிரமணிய அவென்யூ | 3 | 213 | விளாங்குறிச்சி | பூங்கா |
| 4 | சொர்ணாம்பிகா லே–அவுட் | 31 | 227 | கணபதி | பூங்கா |
| 5 | ராஜு நாயுடு ரோடு | 33 | 227 | கணபதி | ஆணையாளர், மாநகராட்சி, பொது உபயோகம் |
| 6 | ஸ்ரீஸ் நகர் | 65 | 518, 519 பகுதி | சங்கனூர் | பூங்கா |
| 7 | மணீஸ் நகர் | 65 | 116/2பகுதி, 117பகுதி, 118பகுதி & 119பகுதி | சங்கனூர் | பூங்கா |
| 8 | கே.ராமசாமி நகர் | 65 | 526/82, 533/1 B2, 534பகுதி & 535/2 பகுதி | சங்கனூர் | மேல்நிலை தொட்டி |

| வ. எண் | மனைப் பிரிவின் பெயர் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | நிலப்பயன்பாடு வகை |
|---|---|---|---|---|---|
| 9 | கண்ணப்ப நகர் | 65 | | சங்கனூர் | ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கீழ் நிலை தொட்டி |
| 10 | ஆர்.ஜி.லே–அவுட் | 66 | 70/1 | சங்கனூர் | குடிநீர் வழங்குதல் |
| 11 | நேரு நகர் | 69 | 41/1 | கணபதி | பூங்கா |
| 12 | லட்சுமிபுரம் | 69 | 237/1 A பகுதி & 2பகுதி | கணபதி | பொது உபயோகம் |
| 13 | முத்துகுமார் நகர் | 69 | 245 பகுதி | கணபதி | பூங்கா |
| 14 | மீனாட்சி நகர் | 70 | 140,141A, 141/2 & 144/3 | கணபதி | பூங்கா |
| 15 | ராக்காச்சி கார்டன் | 72 | 481 பகுதி,<br>482 பகுதி,<br>484 பகுதி, 485/1 & 86/1 | கணபதி | பூங்கா |
| 16 | அன்னை அபிராமி நகர் | 72 | 489 / 1 B 1 | கணபதி | பூங்கா & மேல்நிலைத் தொட்டி |
| 17 | சுந்தரம் கார்டன் | 72 | 72/1 பகுதி,<br>73/2 பகுதி | கணபதி | பூங்கா |
| <u>மேற்கு மண்டலம்</u> | | | | | |
| 18 | பாரதி பார்க் | 34 | 253/1 | சங்கனூர் | பூங்கா |
| 19 | லாலி ரோடு<br>AA திட்ட சாலை | 50 | 64 பகுதி | லாலிரோடு | பொது உபயோகம் |
| 20 | ஏ.கே.எஸ். நகர் | 52 | 112 | | காலியிடம் |
| 21 | பிரியா நகர் | 55 | 12 | குமாரபாளையம் | பூங்கா |
| 22 | சீரநாயக்கன் பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு | 58 | 69 | சீரநாயக்கன் பாளையம் | பொது உபயோகம் |
| 23 | ராம்ஸ் நகர் | 59 | 6 பகுதி & 9 பகுதி | தெலுங்குபாளையம் | பூங்கா |
| 24 | ஆர்.கே.நாயுடு லே–அவுட் | 61 | | தெலுங்குபாளையம் | பூங்கா |
| 25 | வசந்தம் லே–அவுட் | 61 | 3 பகுதி | தெலுங்குபாளையம் | பூங்கா |
| 26 | சிந்தாமணி நகர் | 62 | | தெலுங்குபாளையம் | பொது உபயோகம் |
| 27 | கே.ஜி.லே–அவுட் | 62 | 9 | தெலுங்குபாளையம் | பூங்கா |
| 28 | மடத்தூர் (பைமெட்டல்) | 59 | 18 பகுதி | தெலுங்குபாளையம் | பூங்கா |
| 29 | மீனாட்சி நகர் | 55 | 40 பகுதி | தெலுங்குபாளையம் | பூங்கா |
| 30 | காய்கறி மார்க்கெட் வளாகம் | 64 | 30 பகுதி | மேட்டுப்பாளையம் ரோடு | பொது இடம் |

| வ. எண் | மனைப் பிரிவின் பெயர் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | நிலப்பயன்பாடு வகை |
|---|---|---|---|---|---|
| கிழக்கு மண்டலம் | | | | | |
| 31 | எஸ்.ஐ.ஹெச்.எஸ். காலனி | 4 | 38/1, 39/1, 40 பகுதி, 41,42 & 45 | உப்பிலிபாளையம் | மேல்நிலைத்தொட்டி |
| 32 | எஸ்.ஐ.எஸ்.எச். காலனி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு | 4 | 336/1, 337/1 & 337/4 | உப்பிலிபாளையம் | பூங்கா |
| 33 | தாகூர் நகர் லே–அவுட் | 5 | 229/2 பகுதி, 229/3, 230, 235, 236 & 237 | சிங்காநல்லூர் | பூங்கா |
| 34 | கோத்தாரி நகர் – II | 6 | 279, 289 முதல் 288 வரை, 289/4, 294/2E, 298 பகுதி, 299 & 544/1 | சிங்காநல்லூர் | விளையாட்டு மைதானம் |
| 35 | கோத்தாரி நகர் – I | 6 | 279, 289 முதல் 288 வரை, 289/4, 294/2E, 298 பகுதி, 299 & 544/1 | சிங்காநல்லூர் | விளையாட்டு மைதானம் |
| 36 | இராஜீவ் காந்தி நகர் லே–அவுட் | 14 | 156, 157, 158, 163 & 164 | உப்பிலிபாளையம் | பூங்கா |
| 37 | ஹட்கோ காலனி | 16 | 485/1 A1, 1 B1, 486/1, 487/2, 492/1 பகுதி, 2B196/1, 2A, 3A, 503/1B, 2 & 504/2B. | சௌரிபாளையம் | பூங்கா |
| 38 | கருணாநிதி நகர் | 16 | 262, 263, 302 | சௌரிபாளையம் | பூங்கா |
| 39 | பொன்னி நகர் | 19 | 601/1,2, 624பகுதி, 622 பகுதி, 625 பகுதி | கிருஷ்ணராயபுரம் | விளையாட்டு மைதானம் |
| 40 | புதிய தாமு நகர் | 21 | – | புலியகுளம் கிட்னி சென்டர் அருகில் | காலியிடம் |
| 41 | புலியகுளம் ICDS சென்டர் | 21 | – | புலியகுளம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி | விளையாட்டு மைதானம் |
| 42 | வள்ளியம்மாள் வீதி | 24 | 2099/1 B பகுதி | இராமநாதபுரம் | காலியிடம் |

| வ. எண் | மனைப் பிரிவின் பெயர் | வார்டு எண் | சர்வே எண் | கிராமம் | நிலப்பயன்பாடு வகை |
|---|---|---|---|---|---|
| தெற்கு மண்டலம் | | | | | |
| 43 | சிவராம்நகர் | 13 | 344/2 | இராமநாதபுரம் | நர்சரி பள்ளி |
| 44 | ஜி.கே.கார்டன் | 54 | 50/2, 51,55 பகுதி, 56, 134/1 | அனுப்பர்பாளையம் | பூங்கா |
| 45 | வ.உ. சி. | 13(2) | 1010 | – | பூங்கா |
| 46 | குறிஞ்சி கார்டன் | 42 | 479/2 B, 479/2 A பகுதி 480/2 பகுதி | – | பூங்கா |
| 47 | சாவித்திரி நகர் | 42 | 549/1,2, 548/2, 533/1, 533/15 | – | பூங்கா |

அலுவலகக் குறிப்பு:மாநகரின் அனைத்து பகுதிகளிலும் சீரான, 24 மணி நேரமும், அனைத்து நாட்களிலும் கிடைக்க கூடிய வகையில் குடிநீர் விநியோகம் வழங்க தற்போது சிறுவாணி, பில்லூர் I குடிநீர் திட்டத்தில் பயன்படுத்தப்படும் 45 எண்ணிக்கையிலான கீழ்நிலை / மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுடன் கூடுதலாக 47 எண்ணிக்கையிலான மேல்நிலை / கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்காக தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனம் தேர்வு செய்து தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு பூங்கா மற்றும் பொது உபயோக பயன்பாட்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களில் கட்டுவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 2896/08/ஜே. என். 5

மாநகர மன்ற தீர்மானம் எண் 142 நாள் 29.12.2009

பொருளில் வரிசை எண். 5, ராஜு நாயுடு ரோடு, சங்கனூர் கிராமம், வரிசை எண். 11, நேரு வீதி, சங்கனூர் கிராமம், வரிசை எண். 26, சிந்தாமணி நகர், சங்கனூர் கிராமம், வரிசை எண். 27, கே.ஜி.லேஅவுட், சங்கனூர் கிராமம், வரிசை எண். 30, காய்கறி மார்க்கெட் வளாகம், சங்கனூர் கிராமம், வரிசை எண் 38, PSGV நகர், சௌரிபாளையம் கிராமம் என திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது.

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்கான போதுமான இடவசதி மற்றும் தொழில்நுட்ப ரீதியாக தகுதியானது என்பது குறித்து மீண்டும் சம்பந்தப்பட்ட வார்டு மாமன்ற உறுப்பினர்கள் பொறியாளர்கள் தொழில்நுட்ப ஆலோசகர் ஆய்வு செய்து உறுதி செய்த பின்னர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

பொருள் - கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் - நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டம் செயல்படுத்தப்பட்ட விபரங்கள் மன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக.

----------------

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கோவை மாநகராட்சி பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள 173 எண்ணிக்கையிலான குடிசைப் பகுதிகளில் ஏழை மக்களுக்கான புதிய வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் அமைக்கும் பணி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணி ரூ. 443.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்குடிசைப் பகுதியில் வாழும் பட்டா உள்ள ஏழை மக்களுக்கு அவர்கள் வசிக்கும் குடிசை வீடுகளுக்குப் பதிலாக ஆர்.சி.சி. வீடுகள் கட்டுவதற்கான வழிவகையும், ஆக்கிரமிப்பு செய்து நீண்டகாலமாக வசித்து வரும் குடிசை வாழ் மக்களுக்கு அவ்விடத்திலிருந்து மாற்று இடத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி குடியமர்த்த வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகள் மாநகராட்சி மூலம் மேற்கொள்ளவும் ஒப்புதல் பெறப்பட்டது. இதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மூன்று கட்டங்களாக செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

முதல் மற்றும் இரண்டு கட்டங்களில் 80 குடிசைப் பகுதிகளில் 12,630 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு வீடும் ரூ. 1,60,500/- மதிப்பில் 268 சதுர அடியில் கட்டுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. இம்மதிப்பீட்டுத் தொகையில் 50% தொகையினை மத்திய அரசம் 20% தொகையினை மாநில அரசம் மானியமாக வழங்க மீதமுள்ள 30% தொகையினை பயனாளிகள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இரண்டு பகுதிகளையும் சேர்த்து 5167 பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டத்தில் (I Phase) 2707 பணி உத்தரவுகள் வழங்கப்பட்டு, 1250 பணிகள் துவங்கப்பட்டும், 375 பணிகள் முடிவடைந்தும் உள்ளன. இரண்டாம் கட்டத்தில் (II Phase) 2586 பணி உத்தரவுகள் வழங்கப்பட்டும், 2319 பணிகள் துவங்கப்பட்டு 1286 பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பயனாளிகளுக்கு பணி உத்தரவுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உள்கட்டமைப்பு பணி முதல் கட்டத்தில் 44 பணிகள் ரூ. 508.35 லட்ச மதிப்பீட்டிலும், இரண்டாம் கட்டத்தில் 241 பணிகள் ரூ. 2323.13 லட்ச மதிப்பீட்டிலும் செய்திட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண். 13089/06/JN6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 143 நாள் 29.12.2009</u>**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் திட்டம் முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்கத்திற்கான கலந்தாய்வுக் கூட்டம் கடந்த 08.06.2007 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலர் அவர்களால் நடத்தப்பட்டது.

மேற்படி நடைபெற்ற கூட்டத்தில் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை கொட்டுவதற்கு இடவசதி இல்லாத காரணத்தினால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் அவற்றினை கொட்டுவதற்கு அனுமதி வழங்க மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அரசுச் செயலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கையின்மீது மேல் நடவடிக்கை எடுக்குமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்கள் தனது 07.08.2007ம் தேதியிட்ட (கடித எண் 30625/07/P4 நாள் 07.08.2007) கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கவுண்டம்பாளையம் மற்றும் குனியமுத்தூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகள் தத்தம் நகராட்சிகளில் சேகரமாகும் குப்பைகளை கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டவும், அதற்குண்டான கட்டணத்தை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு செலுத்தவும் கீழ்க்கண்டவாறு தத்தம் நகர் மன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றி இம்மாநகராட்சியின் அனுமதி கேட்டு கடிதம் அனுப்பியுள்ளனர்.

1) கவுண்டம்பாளையம் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 118/2007 நாள் 13.08.2008
2) குனியமுத்தூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 159 நாள் 02.08.2007

நகராட்சிகளின் நிர்வாக ஆணையரின் அறிவுரையின்பேரில் கடந்த 16.04.2009 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆணையர் அவர்களது தலைமையில் திடக்கழிவு மேலாண்டை திட்ட செயலாக்கத்திற்கான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மண்டல நிர்வாக இயக்குனர் (திருப்பூர் மண்டலம்), செயல் அலுவலர் குறிச்சி, குனியமுத்தூர் மற்றும் கவுண்டம்பாளையம் நகராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள், இம்மாநகராட்சியின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை கொட்டுவதற்கு இடவசதி இல்லாத காரணத்தினால் தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை உரிய கட்டணம் பெற்றுக்கொண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டுவதற்கு மாநகராட்சியால் இசைவு தெரிவிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் நவீன உரக்கிடங்கு மற்றும் சானிட்டரி லேண்ட்ஃபில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி இத்திட்டத்தினை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சி அனுகூலமான ஒப்பந்ததாரருக்கு டிப்பிங் பீஸ் (Tipping fee) முறையில் பிராசசிங் மற்றும் லேண்ட் ஃபில்லிங் போன்ற பணிகளுக்கு கட்டணங்கள் வரும் 20 ஆண்டுகளுக்கு செலுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது.

எனவே குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளிலிருந்து பெறப்படும் தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை ஏற்கனவே இப்பணிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்து மேற்கூறிய நகராட்சிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 1625/2008/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மனம் எண் 144 நாள் 29.12.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் குடிசை மேம்பாட்டு அபிவிருந்தி திட்டத்தில் கீழ்கண்ட அபிவிருத்திப் பணிகளுக்கும் மற்றும் பொதுநிதி பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 20-11-2009 மற்றும் 25-11-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **BSUP** | | | | | | | |
| 1 | **2071**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 4 மதுரை வீரன் கோவில் வீதியில் குடிநீர் குழாய் பதித்தல் பணி | 1.35 | 30-10-2009 ஆறாவது அழைப்பு | திரு.ஆர் நடராஜன் | 12.33% அதிகம் | 4.65% அதிகம் |
| 2 | **18809**/09/ எம்.டி.2 | வார்டு எண்:61 வெங்கிட்டாபுரம் நேதாஜி வீதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 7.00 | 29-10-2009 ஆறாவது அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | 9.38% அதிகம் | 4.77% அதிகம் |
| 3 | **2197**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 11 கமலா மில் குட்டை பகுதியில் குடிநீர் பிரதான குழாய் பதித்தல் | 0.65 | 30-10-2009 ஆறாவது அழைப்பு | திரு.ஆர் நடராஜன் | 11.10% அதிகம் | 4.92% அதிகம் |
| 4 | **2224**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 06 காந்தி நகரில் தார் தளம் அமைத்தல் | 16.25 | 12-11-2009 ஆறாவது அழைப்பு | தி/ள்.குரு ரோடு வேஸ் | 14.64% அதிகம் | 4.95% அதிகம் |
| 5 | **2030**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 15 அம்மன் நகர் பகுதியில் குடிநீர் பிரதான குழாய் பதித்தல் | 5.10 | 29-10-2009 ஆறாவது அழைப்பு | திருமதி.வி. பாக்கியம் | 9.40% அதிகம் | 4.98% அதிகம் |
| 6 | **975**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 55 வேடப்பட்டி பகுதியில் மாநகராட்சி காலி இடத்தில் பூங்கா, காம்பவுண்ட் சுவர் மற்றும் மேல் நிலை தொட்டி கட்டுதல் | 16.70 | 12-11-2009 ஆறாவது அழைப்பு | திருமதி. பி.லட்சுமி | 10.37% அதிகம் | 4.93% அதிகம் |
| 7 | **981**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 17 பட்டாளம்மன் கோவில் வீதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 9.00 | 29-10-2009 ஆறாவது அழைப்பு | தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் | 14.10% அதிகம் | 4.59% அதிகம் |
| 8 | **2089**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 11 தேவேந்திரன் வீதியில் குடிநீர் பிரதான குழாய் பதித்தல் | 1.80 | 30-10-2009 ஆறாவது அழைப்பு | திருமதி.வி. பாக்கியம் | 8.38% அதிகம் | 4.92% அதிகம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | **963**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 55 கலைஞர் நகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | 6.80 | 29-10-2009 ஆறாவது அழைப்பு | திருமதி. யு.மணி | 5.09% அதிகம் | 4.60% அதிகம் |
| 10 | **2022**/09/ எம்.டி.2 | வார்டு எண்: 5 அன்னை சத்தியா நகரில் குடிநீர் குழாய் பதித்தல் பணி | 1.35 | 30-10-2009 ஆறாவது அழைப்பு | திரு.ஆர் நடராஜன் | 9.89% அதிகம் | 4.82% அதிகம் |
| பொது நிதி | | | | | | | |
| 11 | **6464**/09/ எம்.டி.4 | வார்டு எண்: 62 ராமலிங்கம் நகர் மாநகராட்சி டிபாது ஒதுக்கீட்டு காலியிடத்தில் சமுதாய கூடம் கட்டுதல் | 5.60 | 10-11-2009 முதல் அழைப்பு | திருமதி. யு.மணி | 4.28% அதிகம் | 4.24% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: வரிசை எண்.1 முதல் 11 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2071/09/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 145 நாள் 29.12.2009**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 7

**கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 07-12-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.**

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10834/09/ எம்.டி.2 | மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகளில் மாதாந்திர ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்து வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளுதல் | 75.00 | 27.11.2009 இரண்டாம் அழைப்பு | திரு. ஆர். மயில்வாணன் | 3.45 அதிகம் |

**மேற்கண்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு- வரிசை எண் 1-ல் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதால் மாமன்றம் இப்பொருளினை அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.10834/09/ எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 146 நாள் 29.12.2009**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 8

கோவை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அவரது தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கடந்த 20-11-2009 அன்று திறனாய்வு செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | சட்டமன்ற உறுப்பினர் நிதி | | | | | |
| 1 | 2543/09/ எம்.டி.3 | வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண் 31-ல் ராம்நகர் பகுதியில் புதியதாக பூங்கா அமைத்தல் | 10.00 | 11.11.2009 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர். செல்வராஜ் | 4.79 அதிகம் |
| 2 | 11176/09 எம்.டி.3 | வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண் 68-ல் ரத்தினபுரி சம்பத் வீதியில் புதிதாக நூலகம் கட்டுதல் | 20.70 | 11.11.2009 ஐந்தாவது அழைப்பு | திருமதி.சி. பாப்பாத்தி | 4.90 அதிகம் |
| | மாநகராட்சி பொது நிதி | | | | | |
| 3 | 8389/09 எம்.டி.3 | வெள்ளலூர் குப்பை கிடங்கில் தார்தளம் அமைத்தல் | 25.00 | 17-11-2009 முதல் அழைப்பு | திரு.ஆர். கிருஷ்ணசாமி | 4.17 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மேற்கண்ட மூன்று பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசியமாக உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற்று மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 2543/09/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மனம் எண் 147 நாள் 29.12.2009**

**பொருளில் வரிசை எண். 1 மற்றும் 3 பணிகளுக்கு மாமன்றம் அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண். 2 பணியான வார்டு எண் 68, ரத்தினபுரி சம்பத் வீதியில் புதிதாக நூலகம் கட்டுதல் பணிக்கு, மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் வாடகைத் தொகையினை நூலகத்துறை செலுத்த சம்மதிக்கும் பட்சத்தில் மாமன்றம் அனுமதி வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடிசை மேம்பாட்டு அபிவிருந்தி திட்டத்தில் கீழ்கண்ட அபிவிருத்திப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 07-12-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **BSUP** | | | | | | |
| 1 | **962/09/** எம்.டி.4 | வார்டு எண்:55 திரு.வி.க.நகரில் பூங்கா அமைத்தல் | 14.00 | 02-12-2009 ஆறாவது அழைப்பு | திருமதி.பி.லட்சுமி | **4.87%** அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மேற்படி பணியை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 962/09/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மனம் எண் 148 நாள் 29.12.2009**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் குடிநீர் அழுத்தம் குறைவாக உள்ள பகுதிகள், குடிசைப் பகுதிகள், குடிநீர் பற்றாக்குறையாக உள்ள பகுதிகள் மற்றும் குழாய் பதிக்கப்படவுள்ள பகுதிகளுக்கு தனியார் டேங்கர் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கான ஒப்பந்தக்காலம் வரும் 27-02-2010—ம் தேதியுடன் முடிவு பெறவுள்ளது. மேலும் வரும் ஜுன் மாதம் 2010-ம் ஆண்டில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதையும் கருத்தில் கொண்டு தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ள பகுதிகளுக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவது அவசியமாகிறது. லாரி மூலம் குடிநீர் விநியோகத்தினை தனியார் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் கடித எண்.58031/08/தி1 நாள்.16-11-2009-ல், சென்னை பெரு நகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் உள்ள நடைமுறையான தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யும் முறையினை பின்பற்றி கோவை மாநகராட்சி பகுதிகளிலும் தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒரு ஆண்டு காலத்திற்கு தனியாா் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீா் விநியோகத்தினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சத்திற்கு மேற்கொள்ளவும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம், நிர்வாக அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4480/2007/(எம்.டி.4)எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மனம் எண் 149 நாள் 29.12.2009**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 11

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 12.12.09 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6546/09/ எம்.டி.4 | சிறுவாணி அடிவாரத்தில் உள்ள மாநகராட்சி அலுவலா் குடியிருப்புகளுக்கு சுற்றுசுவா் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 17.25 | 01-12-2009 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 9.66% அதிகம் | 3.95% அதிகம் |
| 2 | 6471/09/ எம்.டி.4 | வார்டு எண்.34 –ல் பாரதி பூங்கா 8-வது குறுக்கு சாலையில் தார் தளம் புதுப்பித்தல் | 13.50 | 01-12-2009 இரண்டாம் அழைப்பு | தி/ள்.சாந்தி கன்ஸ்ட்ரக் சன்ஸ் | 4.06% அதிகம் | 2.27% அதிகம் |
| 3 | 6474/09/ எம்.டி.4 | வார்டு எண் 62 அண்ணாநகா் மாநகராட்சிக்கு சொந்தமான சலவையகத்தில்படிப்பகம் கட்டுதல் | 8.00 | 04-12-2009 முதல் அழைப்பு | தி/ள்.என்.பி. கே.அசோசி யேட்ஸ் | 4.89% அதிகம் | 4.25% அதிகம் |
| 4 | 13272/09/ எம்.டி.4 | வார்டு எண்.34 பாரதி பூங்காவில் உள்ள உதவி நிர்வாகப் பொறியாளா் குடியிருப்புக்கு மராமத்து பணிகள் செய்தல் | 5.50 | 04-12-2009 முதல் அழைப்பு | திரு.கே. சந்திரபிரகாஷ் | 2.37% அதிகம் | 2.33% அதிகம் |
| 5 | 6480/09/ எம்.டி.4 | வார்டு எண்.62–ல் கே.ஜி. லே-அவுட் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பூங்கா மற்றும் சிறுவா் விளையாட்டுத் திடல் அமைத்தல் | 20.00 | 01-12-2009 முதல் அழைப்பு | திரு.யு.மணி | 4.43% அதிகம் | 3.91% அதிகம் |
| 6 | 6479/09/ எம்.டி.4 | வார்டு எண்.62 சிவக்குமாா் வீதி, சின்னம்மாள் வீதி, இராமலிங்கம் நகா் மற்றும் வார்டு பகுதிகளில் மழைநீா் வடிகால்களில் தளத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 10.00 | 01-12-2009 இரண்டாம் அழைப்பு | தி/ள்.ஆர்.கே. ஆர்.கன்ஸ்ட்ர க்சன்ஸ் | 4.56% அதிகம் | 3.93% அதிகம் |

| பாராளுமன்ற உறுப்பினர் நிதி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 12199/09/ எம்.டி.3 | வார்டு எண்.64-ல் கவுண்டம்- பாளையம் மாநகராட்சி குப்பை கிடங்கில் சுகாதார வளாகம் கட்டுதல | 20.00 | 01-12-2009 ஐந்தாம் அழைப்பு | திருமதி.கே. பங்கஜம் | 6.97% அதிகம் | 4.94% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மேற்படிபணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 6546/09/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 150 நாள் 29.12.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் - ஆர்.எஸ்.புரம், இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகம்-தமிழ்நாடு மின்வாரிய துணை மின் நிலையம் - உயர் மின் அழுத்த கோபுரம் அமைக்க 18 மீ x 16 மீ பரப்பளவு-நிலம் ஒதுக்கீடு இலவசமாக கோரப்பட்டது-அரசுக்கு உத்தேசம் அனுப்புதல்-தொடர்பாக.

பார்வை : மேற்பார்வை பொறியாளர், கோவை மின்பகிர்மான வட்டம்/ மாநகர் அ.எண்.1009/09/ நாள்.23.11.2009 ஆணையாளர் கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதம்.

பார்வையில் கண்ட தமிழ்நாடு மின்சார வாரிய மேற்பார்வை பொறியாளர் கடிதத்தில், ஆர்.எஸ்.புரம் துணை மின் நிலையம் - உயர்மின் அழுத்த கோபுரம் அமைக்க 18மீ x 16மீ பரப்பளவு = 288 ச.மீ அல்லது 3098 சதுரடி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை (T.S.ward 8, T.S.Block 18, T.S.No. 652 பாகம்) இலவசமாக மின்சார வாரியத்திற்கு வழங்கி உதவிடும்படி கோரப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.730 RDLA நாள். 14.4.1976 ல் உள்ளாட்சிக்கு சொந்தமான நிலங்கள் அரசு நிறுவனங்கள் உட்பட தனியாருக்கு வழங்க தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. மேற்காண் உத்திரவில் இருந்து விதி விலக்கு அனுமதி, அரசின் உத்திரவு பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்யும் நில மதிப்பை பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கலாம் என்பதை மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க. எண். 10462/04/எச்.1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 151 நாள் 29.12.2009**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பள்ளி இடத்தினை மின்சார வாரியத்திற்கு வழங்கக்கூடாது என தெரிவித்து 59-வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுத் தலைவருமான திரு. ஆர். கல்யாண சுந்தரம் தனது ஆட்சேபனையை தெரிவித்தார். ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - ஆர்.எஸ்.புரம் டி.எஸ்.வார்டு 8, டி.எஸ். பிளாக்.18, டி.எஸ்.எண்.651 பாகம் - ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகம் - SJSRY (சுவர்ண ஜெயந்தி திட்ட மையம்) மையம் அமைக்க நில ஒதுக்கீடு – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் டி.எஸ்.வார்டு 8, டி.எஸ். பிளாக்.18, டி.எஸ்.எண்.651 பாகம் - ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை ஒட்டி மேற்குபுறம் 19 செண்ட் 335 சதுரடி உள்ள - SJSRY மையம் அமைக்க நில ஒதுக்கீடு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்காண் மாநகராட்சிக்கு சொந்தமான நிலப்பரப்பில் சுவர்ண ஜெயந்தி திட்ட மையம் அரசு அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்ய மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> மன்றத்தின் ஒப்புதலுக்கு ந.க.எண் 11858/09/எச்.1(மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 152 நாள் 29.12.2009</u>

சுவர்ண ஜெயந்தி திட்ட மையம் அமைக்க ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி வளாகம் தவிர்த்து மாற்று இடம் தேர்வு செய்து இம்மையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

.

பொருள்:- உலகத் தமிழ் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - போக்குவரத்து சீரமைப்பு - விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.358/1 நில பரிவர்த்தனை உத்தேசம் - மாமன்ற பொருள் சமர்ப்பித்தல் தொடர்பாக.

பார்வை:- 1. மாமன்ற தீர்மான எண். 295 நாள். 28.11.2008
2. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு போக்குவரத்து சீரமைப்பு மறு உத்தேசம் சமர்ப்பித்தல்.

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோயம்புத்தூரில் நடைபெறுவதை ஒட்டி போக்குவரத்து சீரமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பார்வை 1-ல் கண்ட மாமன்ற தீர்மானத்தில் விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண்.358/1-ல் அமையப் பெற்றுள்ள குடியிருப்புகளை அப்புறப்படுத்தி மேற்படி இடத்தில் கிழபுறம் உள்ள சிவசக்தி நகர் மனைப்பிரிவின் பொது ஒதுக்கீட்டு இடத்தில் குடியமர்த்திவிட்டு சாலையின் போக்கினை நேர் செய்வதற்கு அரசின் அனுமதி பெற்று இடம் பரிவர்த்தனை செய்ய மாமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

தற்சமயம் நிர்வாக காரணங்களுக்காக மேற்காண் குடியிருப்புகளை சிவசக்தி நகர் மனைப்பிரிவு பொது ஒதுக்கீட்டு இடத்திற்கு பதிலாக கொடிசியா அருகில் தமிழ்நாடு மின்வாரிய துணை மின் நிலையத்தினை ஒட்டி வடபுறமும், கொடிசியா சாலையின் தென்புறமும் அமையப் பெற்றுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் குடியமர்த்துவதற்கும், தண்ணீர் பந்தல் சாலையின் போக்கினை பொது மக்களின் நலன் கருதி அரசு அனுமதி பெற்று சீரமைக்கலாம்.

குடியிருப்பு பகுதியில் உள்ள உரிமையாளர்களின் விபரங்கள்.

| வ. எண் | பெயர் | டி.எஸ்.எண்/க.ச.எண். கிராமம் | பரப்பளவு ச.மீ |
|---|---|---|---|
| 1 | திரு.ராமதாஸ் மனைவி மணி, ராமதாஸ் மக்கள் சரவணன், சாரதி. | 88(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.155.5 |
| 2 | நஞ்சப்ப கவுண்டர் மகன் முத்துச்சாமிக் கவுண்டர் மக்கள் சுப்பிரமணியம், சண்முக சுந்தரம், சுதாசிவகம் | 89(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0144.0 |
| 3 | வேலுச்சாமி மனைவி ராமாத்தாள், மக்கள், பழனிச்சாமி, தனலட்சுமி | 97(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0105.5 |
| 4 | சின்னப்பகவுண்டர் மக்கள் சக்திவேல், செல்வராஜ். பாப்புக் கண்ணன், தங்கவேல் | 96(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0137.5 |
| 5 | பழனிக் கவுண்டர் மகன் ரங்கசாமி, ரங்கசாமி, மகன் ராஜாமணி | 95 (358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0069.5 |
| 6 | கருப்புச்சாமி மகன் கந்தசாமி, கந்தசாமி மக்கள் ரங்கநாதன், ரவிச்சந்திரன் | 94(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0115.0 |
| 7 | பழனிச்சாமி மனைவி மயிலாத்தாள், மக்கள் ராஜேந்திரன், பாலசுப்பிரமணியம் | 93(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0123.0 |
| 8 | வேலப்ப கவுண்டர் மனைவி பாப்பம்மாள், மக்கள் குப்புச்சாமி சுப்பிரமணி. நாராயணசாமி கிருஷ்ணமூர்த்தி | 98(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0130.0 |
| 9 | கருப்பண்ண முதலியார் மகன் பழனிச்சாமி, பழனிச்சாமி மக்கள் சுந்தர வடிவேல். ராஜேந்திரன் | 99(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0130.0 |
| 10 | நடராஜன் மனைவி மயிலாத்தாள், மகன் ரமேஷ் | 100(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0123.5 |
| 11 | ஸ்ரீராமன் செட்டியார் தண்ணீர் பந்தல் அறக்கட்டளை | 85, 91(358/1) விளாங்குறிச்சி கிராமம் | 0.0450.0 |
| | | மொத்த பரப்பளவு | 0.3113 |

மேற்காண் உத்தேசம் தொடர்பாக அரசின் அனுமதி பெற்று குடியிருப்பவர்களுக்கு மட்டும் மாற்று இடம் வழங்க மாமன்றத்தின் ஒப்புலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மன்றத்தின் ஒப்புலுக்கு ந.க.எண்.12775/08/H-2(N)

மாநகர மன்ற தீர்மனம் எண் 153 நாள் 29.12.2009

பொருளில் வரிசை எண் 11, ஸ்ரீராமன் செட்டியார் தண்ணீர்பந்தல் அறக்கட்டளை தவிர வரிசை எண் 1 முதல் 10 வரையுள்ள உரிமைதார்களுக்கு, அரசு அனுமதி பெற்று பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுஇடம் வழங்க அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

அரசாணை எண்.131,ஊ.வ.(ம) பஞ்சாயத்து ராஜ் துறை நாள். 16.3.2007 ன்படி நகர்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், மற்றும் தரம் தாழ்த்துதல், குறைத்தல், அவ்வமைப்புகளை பிரித்தல் மற்றும் சேர்த்தல் பற்றிய நடவடிக்கையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய நகராட்சிகள், இருகூர், காளபட்டி, சரவணம்பட்டி, துடியலூர், மதுக்கரை, வடவள்ளி, வெள்ளலூர், சின்னவேடம்பட்டி, பேரூர், வீரகேரளம், வேடபட்டி, ஆகிய பேரூராட்சிகள், வெள்ளக்கிணர், விளாங்குறிச்சி, வெள்ளாணைப்பட்டி, சுண்டக்காமுத்தூர், சித்திரைச்சாவடி, கிழக்கு மற்றும் மேற்கு, சோமையம்பாளையம், பன்னிமடை, ஒட்டர்பாளையம், பட்டணம், மயிலம்பட்டி, நீலம்பூர், மலுமச்சம்பட்டி, சீராப்பாளையம், பேரூர் செட்டிபாளையம் மற்றும் குருடம்பாளையம் ஆகிய கிராம பஞ்சாயத்துக்களையும் சேர்த்து 30 உள்ளாட்சி பகுதிகளை இணைப்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றம் தனது தீர்மான எண்.206 நாள். 10.12.2007-ல் பொருள் குறித்து மாமன்ற அனைத்து கட்சி தலைவர், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவாதித்து முடிவு செய்து மீண்டும் மன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

21.4.2008 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்கள் விவாத கூட்டத்தின் கூட்ட நடவடிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் மேற்கண்ட 30 உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியுடன் இணைக்க கருத்தாய்வு நடைபெற்றுள்ளதால் அதனுடைய வளர்ச்சி திட்ட பணிகளை எதிர்காலத்தில் மாநகராட்சி தான் செய்ய வேண்டி உள்ளதால் எல்லோரும் தங்களது கருத்துக்களை தெளிவாக எடுத்து சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

எதிர்கட்சி தலைவர் குறிப்பிடுகையில் நகரின் கிழக்கு பகுதியில் உள்ள இருகூர் பேருராட்சியும், ஒட்டர்பாளையம், பட்டணம் ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், தற்போது புதியதாக உருவாகும் திருப்பூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட உள்ளதால் கோயம்புத்தூர் மாநகராட்சி எடுப்பதற்கு வாய்ப்பில்லை எனவும், நகரின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தொண்டாமுத்தூர் விடுபட்டுள்ளதை மாநகராட்சி உடன் சேர்க்க வேண்டுமெனவும், கோயம்புத்தூர் நகரின் கிழக்கு, வடக்கு, தெற்கு பகுதிகளில் அதிக அளவில் தொழில் நிறுவனங்கள் உள்ளதால் இப்பகுதிகளை சேர்க்கவும், நகரின் மேற்கு பகுதியில ஆய்வு செய்து விடுபட்ட பகுதிகள் இருந்தால் அவைகளை பற்றிய விவரங்களை மாமன்றத்தில் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார். மேற்கண்ட கருத்துக்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டதில் மாநகர மன்ற தீர்மானம் எண்.99 நாள். 28.5.2008 –ல் மாமன்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை கூட்டி நன்கு ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதின் படி 21.12.2009 ம் தேதியன்று நடைபெற்ற மாமன்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. எனவே இதுகுறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க.எண். 11533/2007/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மனம் எண் 154 நாள் 29.12.2009**

கோவை மாநகராட்சியுடன் அருகாமையில் இருக்கும் பிற உள்ளாட்சிகளை இணைத்து மாநகராட்சியை விரிவுபடுத்த கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டது.

மாநகரை விரிவுபடுத்த எந்தெந்த உள்ளாட்சிகளை இணைப்பது என்பது குறித்தும், எல்லையை முடிவு செய்யவும், மாமன்ற அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மீண்டும் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

பொருள் - மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகள் - வாடகை கட்டிடங்கள் 2009-2010ம் ஆண்டிற்கு வாடகைத் தொகை உரிமையாளருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் பெறுவது – தொடர்பாக.

----------------

26.11.2009-ம் நாளிட்ட கல்விக்குழு தீர்மானம் எண் 17-ல் ஒப்புதல் பெறப்பட்ட மாநகராட்சியின் சொந்தக் கட்டிடம் அல்லாத தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் சிங்காநல்லூர் பகுதியிலுள்ள மாநகராட்சியின் கீழ்காணும் 2 பள்ளிகளுக்கு 2009-2010 ம் ஆண்டில் ஓர் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. 60,144/- (ரூபாய் அறுபது ஆயிரத்து நூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) கட்டிட உரிமையாளருக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட கல்விக்குழுவின் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாதம் தோறும் வழங்கப்படும் வாடகை | ஓராண்டிற்கு | வழங்கப்பட வேண்டிய கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1 | சிங்காநல்லூர் (கிழக்கு) ஆரம்பப்பள்ளி | ரூ. 2,633/- | ரூ. 31,596/- | தலைவர் சிங்காநல்லூர் ஆதிதிராவிட சமூக சேவா சங்கம் அறக்கட்டளை |
| 2 | சிங்காநல்லூர் (தெற்கு) ஆரம்பப்பள்ளி | ரூ. 2,379/- | ரூ. 28,548/- | செயலாளர் அஸ்தாந்திர கொல்ல சமூக சங்கம் சிங்காநல்லூர் |
| | மொத்தம் | ரூ. 5,012/- | ரூ. 60,144/- | |

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 1796/2009/கே. 14

**மாநகர மன்ற தீர்மனம் எண் 155 நாள் 29.12.2009**

**கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் ஆய்விற்குப் பிறகு மீண்டும் மாமன்றத்திற்குப் பொருள் வைக்க முடிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 17

**பொருள் :பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. விஜயலட்சுமி, இளம் பொறியாளர் - கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்து சேலம் மாநகராட்சிக்கு மாற்றம் செய்யக் கோருதல் -தொடர்பாக**

--------------

**அரசாணை (வாலாயம்) எண். 256 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 22.08.2004-ன்படி, திருமதி விஜயலட்சுமி, இளம் பொறியாளர், சேலம் மாநகராட்சியில் இருந்து கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதல் செய்ய ஆணையிடப்பட்டு தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியில் இளம் பொறியாளராகப் பணிபுரிந்து வருகிறார்**

**திருமதி. விஜயலட்சுமி, இளம் பொறியாளர், தன் குடும்ப சூழ்நிலை காரணமாக மீண்டும் சேலம் மாநகராட்சிக்குச் செல்ல தனது 19.11.2009-ம் தேதிய விண்ணப்பத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே திருமதி விஜயலட்சுமி, இளம் பொறியாளர் அவர்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவரை சேலம் மாநகராட்சிக்கு மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 16738/2009/எம்.சி.1**

**மாநகர மன்ற தீர்மனம் எண் 156 நாள் 29.12.2009**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 18

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கான மாதாந்திர தொடர் கட்டணம் வழங்குதல் மற்றும் வழக்கு கட்டண விகிதங்களை உயர்த்தி வழங்குதல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்து நீதிமன்ற வழக்குகளை நடத்தி வரும் மாநகராட்சி வழக்கறிஞர்களுக்கான வழக்கு கட்டணம் மாமன்ற தீர்மாணம் எண். 325, நாள்: 31.01.2003–ன் அடிப்படையில் கீழ்கண்ட விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | தொழிலாளர் நீதி மன்றம், தொழிலாளர் அலுவலகம், சொத்துவரிவிதிப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாய வழக்குகள் மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் சாதாரண பிரதிவாதியாக சேர்க்கப்பட்ட வழக்குகள் | ரூ.500/– |
| 2. | கோவை மாவட்ட நீதி மன்ற வழக்குகள் | ரூ.1000/– |
| 3. | சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் | ரூ.3000/– |

இத்துடன் கோவை மாவட்ட நீதி மன்ற வழக்குகள் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளுக்கு வழக்கு செலவுத்தொகையாக ரூ.500/– கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கோவை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகும் மாநகராட்சி வழக்கறிஞர்கள் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராகும் வழக்கறிஞர்கள், தட்டச்சு கூலி, எழுது பொருட்கள் விலை உயர்ந்துள்ளதாலும் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்ட வழக்குகட்டணம் மிகவும் குறைவாக உள்ளதாக தெரிவித்து வழக்கு கட்டணத்தை கீழ்கண்ட விகிதத்தில் உயர்த்தி வழங்மாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள். மேலும் தொடர் கட்டணம் **(Monthly Retainer Fees)** மாதாமாதம் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

1 தொடர் கட்டணம்

| | | |
|---|---|---|
| **i)** | கோவை மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கான மாதாந்திர தொடர் கட்டணம் **(Monthly Retainer Fees)** | ரூ.10000/- |
| **ii)** | சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களுக்கான மாதந்திர தொடர் கட்டணம் **(Monthly Retainer Fees)** | ரூ.15000/- |

2 வழக்குகட்டணம்

| | | |
|---|---|---|
| **i)** | சொத்து வரிவிதிப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாய வழக்குகள் | ரூ.1000/- |
| **ii)** | கோவை மாவட்ட நீதிமன்ற சிவில் வழக்குகள், மேல் முறையீட்டு வழக்குகள் மற்றும் தொழிலாளர் அலுவலகம், தொழிலாளர் நீதிமன்ற வழக்குகள். | ரூ.5000/- |
| **iii)** | **Caveat Petitions** | ரூ.2000/- |
| **iv)** | சட்ட கருத்துருக்களுக்கு | ரூ.1000/- |
| **iii)** | சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் (ரிட் அப்பீல் மற்றும் செகண்ட் அப்பீல் வழக்குகளுக்கு) | ரூ.15000/- |
| **iv)** | சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் (ரிட் மனுக்கள், சீ.ஆர்.பி வழக்குகள் மற்றும் பிற வழக்குகளுக்கு) | ரூ.10000/- |

மேலும், கோவை மாவட்ட நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு வழக்கில் ஆஜராகும் போதே வழக்கு கட்டணத்தில் 50% வழங்குமாறும், மற்ற இடைநிலை சிலவுகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப வழக்கு கட்டணத்தை உயர்த்தி வழங்கவும் கோரியுள்ளார்கள்.

மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராகும் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கான வழக்குகட்டணம் கடந்த 2003-ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டு 7 ஆண்டுகளாக உயர்வு செய்யப்படாமல் உள்ளதாலும், தட்டச்சு கூலி, எழுது பொருட்கள் முதலிய செலவினங்கள் விலை உயர்ந்துள்ளதாலும் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகும் மாநகராட்சி வழக்கறிஞர்கள் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் கோரிக்கையை பரிசீலித்து கீழ்கண்டவாறு மாநகராட்சி வழக்கறிஞர்களுக்கான வழக்குகட்டணம் உயர்வு செய்யலாம்.

1) தொடர்கட்டணம் **(Monthly Retainer Fees)**

| | | |
|---|---|---|
| **i)** | கோவை மாநகராட்சி உயர்நீதி மன்ற நிலை வழக்கறிஞர்கள். | ரூ.3000/- |
| **ii)** | கோவை மாநகராட்சி மாவட்டநீதிமன்ற நிலை வழக்கறிஞர்கள் மற்றும் பிற நீதிமன்ற வழக்கறிஞர்கள் | ரூ.2000/- |

2) உயர்நீதி மன்ற வழக்குகட்டணம்

| வ. எண் | வழக்குகள் | ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் கட்டணம் | மாநகராட்சி வழக்கறிஞர்கள் கோரும் தொகை | முடிவு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | மாநகராட்சியால் தாக்கல் செய்யப்படும் ரிட் மனுக்கள், ரிட் மேல் முறையீடு மற்றும் மற்ற மேல் முறையீட்டு வழக்குகள் | ரூ.3000/- + ரூ.500/- | ரூ.15000/- | ரூ.6000/- (இரண்டு தவணைகள்) |
| 2 | எதிர் உறுதி மனு தாக்கல் செய்யப்பட்டு முழு விசாரணை செய்து முடிவு செய்யப்படும் வழக்குகள்/ மேல்முறையீட்டு வழக்குகள் | ரூ.3000/- + ரூ.500/- | ரூ.10000/- | ரூ.6000/- (இரண்டு தவணைகள்) |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | எதிர் உறுதி மனு தாக்கல் செய்யப்படாமல் முழு விசாரணை செய்து முடிவு செய்யப்படும் வழக்குகள்/ மேல்முறையீட்டு வழக்குகள் | ரூ.3000/- + ரூ.500/- | ரூ.10000/- | ரூ.4000/- |
| 4 | தொகுதி வழக்குகள் **(Batch cases)** (இரண்டு தவணைகள்) | ரூ.2000/- | - | முதல் வழக்கிற்கு ரூ.6000/-கூடுதல் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ.1500/- (அதிக பட்சம் ரூ.30,000/-) |
| 5 | ஆரம்ப நிலையிலேயே முடிவு செய்யப்படும் வழக்குகள். **(Admission stage itself)** | ரூ.3000/- | ரூ.10000/- | ரூ.3000/- |

மேற்படி வழக்குகட்டணங்களில், வரிசை எண் 3 மற்றும் 5 இனங்களுக்கு வழக்கு கட்டணம் வழக்கு முடிவு பெற்ற நிலையிலும், வரிசை எண் 1, 2 மற்றும் 4 இனங்களுக்கு வழக்கு கட்டணம் உறுதி மனு/எதிர் உறுதி மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 50 சதவீத தொகையும், வழக்கு முடிவு பெறும் போது மீதம் உள்ள 50 சதவீத தொகை வழங்கப்படும்.

உயர் நீதிமன்ற வழக்குகளில் டைப் செட் மற்றும் இதர செலவுகள் ஏற்படும் வழக்கு இனங்களில் வழக்கு கட்டணத்துடன் தனியே பட்டியலுடன் இதர வழக்கு செலவுக்கான கட்டணத்தையும் பெற்றுக்கொள்ளலாம்,

3) மாவட்ட நீதி மன்ற வழக்குகட்டணம்

| வ. எண் | வழக்குகள் | ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் கட்டணம் | மாநகராட்சி வழக்கறிஞர்கள் கோரும் தொகை | முடிவு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | மாநகராட்சி சார்பில் தாக்கல் செய்யப்படும் மேல் முறையீட்டு வழக்குகள் | ரூ.1500/- + ரூ.500/- | ரூ.5000/- | ரூ.3500/- (இரண்டு தவணைகள்) |
| 2. | மாநகராட்சிக்கு எதிராக தொடரப்படும் அனைத்து மாவட்ட நீதி மன்ற வழக்குகள் | ரூ.1500/- + ரூ.500/- | ரூ.5000/- | ரூ.3000/- (இரண்டு தவணைகள்) |
| 3. | மாநகராட்சி முறை சார்ந்த உடந்தையாளராக **(Formal party)** சேர்க்கப்படும் வழக்குகள் மற்றும் **Caveat Petitions.** | ரூ.1500/- | ரூ.5000/- | ரூ.2000/- |
| 4. | தொழிலாளர் அலுவலகம் சம்பந்தப்பட்ட வழக்குகள் | ரூ.500/- + ரூ.500/- | ரூ.5000/- | ரூ.2000/- (இரண்டு தவணைகள்) |
| 5. | சொத்து வரிவிதிப்பு மேல் முறையீட்டு தீர்ப்பாய வழக்குகள் | ரூ.500/- | ரூ.1000/- | ரூ.1000/- |

மேற்படி வழக்குகட்டணங்களில், வரிசை எண் 3 மற்றும் 5 இனங்களுக்கு வழக்கு கட்டணம் வழக்கு முடிவு பெற்ற நிலையிலும், வரிசை எண் 1, 2 மற்றும் 4-ல் உள்ள இனங்களுக்கு வழக்கு கட்டணம் உறுதி மனு/எதிர் உறுதி மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 50 சதவீத தொயும், வழக்கு முடிவு பெறும் போது மீதம் உள்ள 50 சதவீத தொகை வழங்கப்படும்,

மேற்குறிப்பிட்ட இனங்களை தவிர பிற இனங்களுக்கு கட்டணம் வழங்க வேண்டிய சூழ்நிலையில் ஆணையாளரின் ஆணை பெற்று வழங்கவும்,

நிலை வழக்கறிஞர் பணிக்காலம் முடியும் போது அல்லது பணி துறக்கும்போது வழக்கு தொடர்பாக எவ்வித கட்டணமும் வழங்காமல் இருந்தால் வக்காலத்து கட்டணமாக ஒரு வழக்கிற்கு ரூ.500/- வீதம் வழங்கவும்,

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்குபின்பு மாமன்ற ஒப்புதல் பெற்று, மாமன்ற ஒப்புதல் பெறப்பட்ட நாளிலிருந்து இக்கட்டண விகிதங்கள் வழங்கவும்,

மேற்படி விகிதத்தில் மாநகராட்சி வழக்கறிஞர்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு சமர்பித்ததில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண்.10, நாள்:18.12.2009-ன் படி கீழ்கண்டவாறு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

“கோவை மாநகராட்சி தொடர்புடைய வழக்குகளை கவனிக்க போதுமான உதவியாளர்களை நியமித்து மாநகராட்சி வழக்குகள் குறித்து உடனுக்குடன் தகவல்கள் சேகரித்து வழக்குகளை மாநகராட்சிக்கு சாதகமாக விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், கோவை மாநகராட்சி தொடர்புடைய வழக்குகளை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சென்னை உயர்நீதி மன்றத்தில் கவனித்து வரும் வழக்கறிஞருக்கு தொடர் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 7000/- நிர்ணயம் செய்யவும், மாநகர மன்ற தீர்மானம் எண். 83 நாள் 30.9.2009-ன் படி நியமிக்கப்பட்ட சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞருக்கு மாதாந்திர தொடர் கட்டணமாக ரூ.5000/- நிர்ணயம் செய்யவும், மாவட்ட நீதிமன்ற நிலை வழக்கறிஞர்கள் மற்றும் பிற நீதி மன்ற வழக்கறிஞர்களுக்கு மாதாந்திர தொடர் கட்டணமாக ரூ. 3000/- நிர்ணயம் செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்தும்,

உயர்நீதி மன்ற வழக்கு கட்டணம், வரிசை எண்.4 தொகுதி வழக்குகள் (**Batch Cases)** கட்டணத்தில் முதல் மூன்று வழக்குகளுக்கு தலா ரூ. 6000/- வீதம் நிர்ணயம் செய்யவும், மூன்று வழக்கிற்கும் மேல் கூடுதல் ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ. 1500/- அதிகபட்சம் ரூ.30,000/- என நிர்ணயம் செய்யவும், பிற கட்டண விகிதங்களை அனுமதிக்கவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்தும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.”

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரையின் படி மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கான தொடர் கட்டணம் மற்றும் வழக்கு கட்டணங்களை நிர்ணயம் செய்யவும், இக்கட்டண விகிதங்களை 01.01.2010 முதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது..

<u>அலுவலகக்குறிப்பு:</u> அனுமதிக்கலாம். ந.க.எண். 10439/2009/எம்.சி.10.

**<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 157 நாள் 29.12.2009</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 10 நாள் 18.12.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**பொருள் எண் 19**

**பொருள் :பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர் - கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்து சேலம் மாநகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டது – தொடர்ந்து சேலம் மாநகராட்சியிலேயே பணிபுரியக் கோருதல் -தொடர்பாக**

-------------

**திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர், சேலம் மாநகராட்சி அவர்கள், அரசாணை (ப) எண். 443 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 11.11.2005-ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்து சேலம் மாநகராட்சியில் காலியாக உள்ள பணியிடத்திற்கு ஒரு ஆண்டிற்கு மாற்றுப்பணி அடிப்படையில் 10.12.2005 ம் தேதி முதல் மாறுதல் செய்யப்பட்டு நாளது தேதிவரை தொடர்ந்து சேலம் மாநகராட்சியில் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.**

**தற்போது திரு. மனோகரன், உதவிப் பொறியாளர், தொடர்ந்து சேலம் மாநகராட்சியிலேயே பணிபுரிய விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து சேலம் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண். 104 நாள் 30.05.2007-ன்படி, தீர்மானம் நிறைவேற்றி சேலம் மாநகராட்சியில் பணிபுரிய கோரியதை அங்கீகரித்து சேலம் மாநகராட்சி நிர்வாகம் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.**

**நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண் 16121/2006/எப்.4-ன்படி, திரு மனோகரன், சேலம் மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றத்தில் பொருள் வைத்து உரிய தீர்மானத்தை அனுப்பக் கோரியுள்ளார். மேலும் திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர் அவர்கள் தனது 21.10.2009-ம் தேதிய விண்ணப்பத்தில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தொடர்ந்து சேலம் மாநகராட்சியில் பணிபுரிய கோயம்புத்தூர் மாநகர மாமன்றத்தின் இசைவு வழங்குமாறு கோரி விண்ணப்பித்துள்ளார்.**

எனவே திரு. கே. மனோகரன், உதவிப் பொறியாளர் தொடர்ந்து சேலம் மாநகராட்சியிலேயே பணிபுரிய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 16738/2009/எம்.சி.1

**மாநகர மன்ற தீர்மனம் எண் 158 நாள் 29.12.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

பொருள் : பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - தெருவிளக்குகள் பராமரிப்பு - உதவி பொறியாளர் (மின்சாரம்) – 4 பணியிடங்கள் - உதவி செயற் பொறியாளர் (மின்சாரம் )- 1 பணியிடம் தோற்றுவிக்க செயற்குறிப்பு அனுப்ப அனுமதி கோருதல் - தொடர்பாக

-------------

அரசாணை எண் 77, குடிநீர் வழங்கல் (எம்ஏ4) துறை நாள் 13-05-1998-ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 5 உதவி நிர்வாகப் பொறியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஐந்து பணியிடங்களில் உதவி நிர்வாகப் பொறியாளர் (மின்சாரம்) மிகைப்பணியிடமாக நீட்டிக்கவும், மிகை பணியிடத்திலுள்ள பணியாளர் ஓய்வு பெற்றாலோ அல்லது வேறு பணிக்கு சென்றுவிட்டாலோ அப்பணியிடம் நீக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி திரு எ. அமானுல்லா, உதவி நிர்வாகப் பொறியாளர் (மின்சாரம்) 30.06.2009-ல் ஓய்வு பெற்றுவிட்டபடியால், அப்பணியிடம் அரசாணையின்படி நீக்கப்பட்டது கோயம்புத்தூர் மாநகராட்சியில் 36,515 எண்ணிக்கை தெருவிளக்குகள் உள்ளது. தெருவிளக்கு பராமரிப்பு தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க மற்றும் மாநகராட்சி கட்டிடங்கள், 80 பள்ளிக் கட்டிடங்கள், பேருந்து நிலையங்கள், 22 மருத்துவமனைகள், 720 ஆழ்துளை கிணறுகள் பராமரிக்க உதவி நிர்வாகப் பொறியாளர் (மின்சாரம்) பணியிடம் மிகவும் அவசியமாகிறது மேலும் மண்டலத்திற்கு ஒரு உதவி பொறியாளர் வீதம் நான்கு உதவிப் பொறியாளர் (மின்சாரம்) பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது எனவே மாநகராட்சியில் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளை திறம்பட மேற்கொள்ள நான்கு உதவி பொறியாளர் (மின்சாரம்) மற்றும் ஒரு உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) ஆகிய பணியிடங்களை தோற்றுவிக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 14871/2009/எம்.சி1

**மாநகர மன்ற தீர்மனம் எண் 159 நாள் 29.12.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

பொருள் : பணியமைப்பு –கோயம்புத்தூர் மாநகராசி- திரு மா. ரவி, இளம் பொறியாளர், திருநெல்வேலி மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோருதல் - தொடர்பாக.

---------------

திருநெல்வேலி மாநகராட்சியில் இளம் பொறியாளராகப் பணிபுரியும் திரு. மா. ரவி அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.10899/09/எப்.4 நாள் 23.04.2009ல், திருநெல்வேலி மாநகராட்சியில் பணியாற்றும் திரு.மா. ரவி, இளம் பொறியாளர் குடும்ப சூழ்நிலை காரணமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாறுதல் கோரியுள்ளதாகவும், திருநெல்வேலி மாநகராட்சி தீர்மான எண்.337, நாள் 26.02.2009ன்படி, மாறுதல் செய்ய இசைவு தெரிவித்துள்ளது எனவும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியிடங்கள் காலியிருப்பின் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று, கருத்துரு அனுப்புமாறு கோரியுள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில், பொறியியல் பிரிவில் 36 உதவி மற்றும் இளம் பொறியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. அப்பணியிடங்களில் தற்பொழுது 31 உதவி மற்றும் இளம் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். மீதமுள்ள 5 இளம் மற்றும் உதவிப் பொறியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப நியமனக் குழு தீர்மான எண்.8, நாள் 08.08.2008ல் உதவி இயக்குநர், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட பெயர் பட்டியல்படி, தகுதிவாய்ந்த 4 நபர்கள் தேர்வு செய்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. உயர்நீதி மன்ற ரிட் வழக்கு எண்.W.P No.19806/2008–ல் உதவி பொறியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் செய்யக்கூடாது என உயர்நீதி மன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பித்துள்ளது. மாமன்றத் தீர்மானம் எண்.228, நாள் 29.08.2008–ன்படி, தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் பணியிடங்களில், மாநகராட்சிப் பணியாளர்களை தவிர்த்து வெளியிலிருந்து நேரடி நியமனம் செய்யக்கூடாது என உயர்நீதி மன்றம் தடையாணை பிறப்பித்துள்ளது எனவும், வழக்கு எண்.W.P No.19806/2008–ல் இடைக்கால உறுத்துக்கட்டளை (Interim Injunction) பிறப்பித்துள்ளது எனவும், தடை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து, நீதிமன்ற முடிவின் அடிப்படையில் மேல்நடவடிக்கை தொடர தீர்மானிக்கப்பட்டது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இடைக்கால உறுத்துக் கட்டளையினை எதிர்த்து மாநகராட்சி தரப்பில் உயர்நீதி மன்றத்தில் மனு செய்யப்பட்டதில், உயர்நீதி மன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளையினை மாற்றி, மாநகராட்சியில் 5 உதவி மற்றும் இளம் பொறியாளர் பணியிடங்களை ஒதுக்கீடு செய்து வைக்கவும், மீதம் காலிப்பணியிடங்கள் இருப்பின், அதனை நேரடி நியமனம் மூலம் நிரப்பிக் கொள்ளலாம் எனவும் உத்திரவு வழங்கியுள்ளது.

உயர்நீதிமன்ற உத்திரவின்படி, தற்போது 5 உதவி மற்றும் இளம் பொறியாளர் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்து, காலியாக வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் இளம் பொறியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி. விஜயலட்சுமி, இளம் பொறியாளர், அவர்கள் சேலம் மாநகராட்சிக்கு பணி மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார். திருமதி. விஜயலட்சுமி, இளம் பொறியாளர், சேலம் மாறுதல் செய்யப்படுவதால், கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒரு உதவி மற்றும் இளம் பொறியாளர் பணியிடம் காலியிடமாகும் என்பதால், திருநெல்வேலி மாநகராட்சியில் இளம் பொறியாளராக பணிபுரியும் திரு.மா. ரவி அவர்களை கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணி மாறுதல் வழியாக நியமனம் செய்ய மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் . நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக அரசுக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண் 4413/2009/எம்.சி.1

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 160 நாள் 29.12.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குனர் வழியாக அரசுக்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

பொருள்: சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - கோவை மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - தொலைக்காட்சி பெட்டிகள் மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் 0.02.2007 முதல் 31.01.2010 வரை ஒப்படை செய்யப்பட்டது. – உரிமக்காலம் 31.01.2010 உடன் முடிவடைய உள்ளது – தொடர்பாக

------------

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள குத்தகை இனங்களுள் ஒன்றான தொலைக்காட்சி பெட்டிகள் மூலம் பொது மக்களுக்கு விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் மாமன்ற தீர்மான எண் 286 நாள்.02.02.2007-ன்படி, திரு.பாண்டியராஜன் என்பவருக்கு 05.02.2007 முதல் 31.01.2010 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைத் தொகை ரூ. 9,000/-க்கு ஒப்படை செய்யப்பட்டது.

மேற்காண், குத்தகை உரிமத்தின் உரிமக் காலம் 31.01.2010 உடன் முடிவடைய உள்ளது. எனவே, மேற்படி குத்தகை இனத்தை 01.02.2010 முதல் 31.03.2013 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 5/2009 நாள் 18.12.09-ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி உரிம இனம் 31.01.2010 உடன் முடிவடைவதை மேலும் 2 மாதங்களுக்கு மேற்படி குத்தகைதாரருக்கே நீட்டிப்பு செய்து வழங்கவும் மேற்படி குத்தகை இனத்தினை வரும் காலங்களில் குத்தகை மற்றும் பொது ஏல இனங்களின் வரிசையில் சேர்க்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே மேற்படி குத்தகை இனத்தினை 01.02.2010 முதல் 31.03.2013 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செலவினங்களை ஏற்றுக்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 15525/2009/கி.அ11

**மாநகர மன்ற தீர்மனம் எண் 161 நாள் 29.12.2009**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 5 நாள் 18.12.09 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

பொருள்: கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - D.B.ரோடு வணிக வளாக கட்டிடத்தில் - தரைத் தளம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா அலுவலக A.T.M. சென்டர்க்கு மாத வாடகைக்கு ஒதுக்கீடு வழங்குவது – குறித்து.

-------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வரியில்லா இனங்கள், D.B. ரோட்டிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கட்டிடம் மாத வாடகைக்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அலுவலகத்திற்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்தது.

மேற்படி வங்கியின் மேலாளர் தனது 03.09.2009-ந் தேதிய கடிதத்தில் மேற்படி கட்டிடத்தில் முதல் தளத்தில் இயங்கி வந்த அலுவலகத்தை காலி செய்து மாநகராட்சி வசம் திரும்ப 30.08.09-ந் தேதியன்று ஒப்படைத்துள்ளதாகவும், தரைதளத்தில் A.T.M. சென்டர்க்கு தனக்கு தனியே வாடகைக்கு ஒதுக்கீடு வழங்க கோரியுள்ளார்.

எனவே தற்கால மார்க்கெட் நிலவரப்படி, மாத வாடகையாக ரூ.5053-ஐ நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே D.B. ரோட்டிலுள்ள தரைதள கட்டிடத்தை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா அலுவலகத்திற்கு A.T.M. சென்டர்க்கு மாத வாடகை ரூ.5053-க்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 3 நாள் 29.10.2009-ன்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> 1) ஒப்புதல் அளிக்கலாம்
2) பொது ஏலம் தொடர்பான விளம்பர செலவுகளை அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5583/09அ1(மே)

<u>**மாநகர மன்ற தீர்மனம் எண் 162 நாள் 29.12.2009**</u>

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 3 நாள் 29.10.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 24

பொருள்: கோவை மாநகராட்சி தியாகி குமரன் மார்க்கெட்டிலுள்ள – மொத்த காய்கறி மார்க்கெட் - மேட்டுப்பாளையம் சாலைக்கு ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்டது – கடை எண்.61-ஐ PVR பாலன் என்பவருக்கும் கடை எண்.76-ஐ திரு.தங்கமணி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யவும் மீதமுள்ள 7 கடைகளை பொது மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அனுமதி கோருவது – குறித்து.

கோவை மாநகராட்சிக்குட்பட்ட தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள மொத்த காய்கறி மார்க்கெட்டானது மேட்டுப்பாளையம் சாலைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளது பட்டியல் தயார் செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மானம் 19 தேதி 4.4.94)

முதற்கட்டமாக 60 கடைகள் கட்டி 60 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மான எண்.1919, தேதி 20.06.94)

மீண்டும் 18 கடைகள் கட்டப்பட்டு எஞ்சிய 18 வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மான எண்.3245 தேதி 13.1.96). இதில் 10 நபர்கள் மட்டுமே கடைகளின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டனர். எஞ்சியவர்கள் (திரு. முருகன், PVR பாலன் உட்பட) 9 நபர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளின் பொறுப்பினை ஏற்க காலம் தாழ்த்தி வந்தனர்.

இந்நிலையில் பழைய வியாபாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து கடைகளை ஒதுக்கீடு செய்யும் முறையினை ரத்து செய்து G.O.No. 85, MAWS எண்ணிட்ட தேதி 19.07.2000-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டது. இதனால் இதுவரை காலம் தாழ்த்தி வந்த வியாபாரிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளின் பொறுப்பினை ஏற்க மாநகராட்சியினை அணுகினர். இருப்பினும் இவர்களுக்கு கடைகளை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டு அதன் மீது அரசின் தெளிவுரை கோர மாமன்ற தீர்மான எண்.420 தேதி 28.03.02-ன்படி முடிவு செய்து அரசுக்குஅனுப்பப்பட்டது.

இதன்மீது (CMA அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட தெளிவுரை கடிதம் 42522/02/MCB) தேதி 5.11.04-ல் மேற்படி கடைகளை அரசாணை 85-ன் அடிப்படையில் பொது ஏலத்தில் விடுமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி 9 கடைகளை கடந்த 30.06.2005-ம் தேதியன்று மாநகராட்சியானது பொது ஏலத்திற்கு கொண்டு வந்தது.

மேற்படி 9 கடைகள் பொது ஏலத்தின் மூலம் ஒப்படைப்பு செய்யப்படுவதை எதிர்த்து W.P.எண்கள் 24052/05 மற்றும் 24053/05 ஆகியவற்றின்படி திரு.PVR பாலன் மற்றும் திரு.தங்கமணி ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து அதில் W.P.M.P. எண்கள் 26223/05 மற்றும் 26225/05 ஆகியவற்றின்படி மாநகராட்சியின் பொது ஏலத்திற்கு எதிராக தடை உத்திரவுகளும் பெற்றனர். இதனால் மேற்படி கடைகளை மாநகராட்சியால் பொது ஏலம் மூலம் ஒப்படைப்பு செய்ய இயலாத நிலையில் இருந்தது.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்குகளில் கடந்த 13.11.09 அன்று இறுதி உத்திரவுவழங்கப்பட்டுள்ளது. அதன்படி கடை எண்.61-ஐ திரு.PVR.பாலன் என்பவருக்கும், கடை எண்.76-ஐ திரு.தங்கமணி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர் மேற்படி உயர்நீதிமன்ற உத்திரவுகளின்படி கடைகளை தங்களுக்கு ஒதுக்கீடு செய்யுமாறு 07.12.09-ந் தேதிய கடிதங்களின் மூலம் கோரியுள்ளனர். இதுபோலவே மீதமுள்ள வியாபாரிகளில் (உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடராதவர்கள்) திரு.SMS. அப்துல் கரீம் திரு.ராஜுநாயுடு திரு.சென்னைகேசவலு நாயுடு ஆகியோர்கள் தங்களது 07.12.09-ந் தேதிய கடிதங்களில் மேற்படி வழக்குகள் தொடர்ந்த PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர்களுக்கு எந்த காரணத்திற்காக கடை ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்ததோ அதே காரணத்திற்காக தான் தங்களுக்கும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் தற்போது மேற்படி PVR பாலன் மற்றும் தங்கமணி ஆகியோர்களுக்கு உயர்நீதிமன்றம் அளித்த உத்திரவின் அடிப்படையிலேயே தங்களுக்கும் ஏற்கனவே மாநகராட்சி தீர்மானங்களின்படி பரிந்துரைக்கப்பட்ட கடைகளை ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பாக பெறப்பட்டுள்ள மாநகராட்சி உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆர்.சிவக்குமார் அவர்களது கருத்துரை தேதி 21.11.2009-ல் மேற்படி கடைகள் பல ஆண்டுகளாக வழக்குகளின் காரணமாக காலியாக வைக்கப்பட்டுள்ளதால், மேற்படி உயர்நீதிமன்ற உத்திரவுகளின்படி மேற்படி கடை எண்.61-ஐ திரு. PVR பாலன் என்பவருக்கும், கடை எண். 76-ஐ திரு.தங்கமணி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யலாம் எனவும், மேலும் வழக்குகள் தற்போது முடிவுற்றுவிட்டதால் எஞ்சிய 7 கடைகளை பொது ஏலத்திற்கு கொண்டு வரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மற்றும் மேற்படி மார்க்கெட்டில் உள்ள கடை எண்.61 மற்றும் 76-க்கு அருகிலுள்ள மற்ற 16 கடைகளுக்கும் கடை ஒதுக்கீடு வழங்கப்பட்ட நாள் முதல் கடை வாடகை ஒவ்வொரு மூன்றாண்டு காலத்திற்கும் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டு வந்ததில் கடைசியாக மாநகர மன்றத் தீர்மானம் எண் 239 நாள் 29.09.08-ல் 01.04.2007 முதல் 31.03.2010 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ததில் மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கடை எண்.61 மற்றும் 76-க்கும் மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.1335- ஆக நிர்ணயம் செய்யவும், ஒரு வருட வாடகை முன்பணமாக (1335x12=16020-) ரூ.16020-ஐ வசூலிக்கவும், மற்றும் மீதமுள்ள 7 கடைகளுக்கு தற்சமயம் நடைமுறையில் உள்ள வைப்புத் தொகை ரூ.50,000- சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ.2,00,000- இதற்கு பதிலாக வங்கி பொறுப்புறுதி சான்றிதழ் அல்லது ரூ.1,00,000- டிபாஸிட் தொகையாக செலுத்தவும் மாதாந்திர வாடகையை தற்கால மார்க்கெட் நிலவரப்படி அரசு வழிகாட்டி மதிப்பு பெற்று நிர்ணயம் செய்து பொது ஏலத்திற்கு கொண்டுவரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆகவே கடை எண்.61-ஐ திரு.PVR.பாலன் என்பவருக்கும், கடை எண்.76-ஐ திரு.தங்கமணி என்பவருக்கும் ஒதுக்கீடு செய்யவும் எஞ்சிய 7 கடைகளை பொது மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.15, நாள் 18.11.2009 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> அனுமதிக்கலாம். ந.க.எண்.11486/2009/ அ1 (மே)

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 163 நாள் 29.12.2009</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண்.15 நாள் 18.11.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 25

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் உரிம காலம் மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகள் - உரிமையாணை புதுப்பித்தல் - குறித்து.

பார்வை : அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகளின் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைகிறது. மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள் எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மாண எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய பார்வையில் காணும் அரசு ஆணையின்படி கடைகளின் அளவு ஏற்கனவே உள்ள உரிமக் கட்டணம் 15% உயர்வு செய்த உரிம கட்டணம் ஆகிய விபரங்கள் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண் | உரிமக் காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டிய நாள் | தற்போதுள்ள மாத வாடகை ரூ. | அரசு ஆணை எண்.92 ந.நி. மற்றும் கு.வ.துறை நாள் 03.07.07 ன் படி குறைந்த பட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| பாரதிபார்க் ரோடு வணிக வளாகம் 12.50x10=125 ச.அடி | | | | | |
| 1 | 7 | 27.03.06 | 28.03.09 | 1956 | 2249 |
| 2 | 8 | 27.03.06 | 28.03.09 | 2875 | 3306 |
| கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு 17x10=170) | | | | | |
| 3 | 7 | 01.04.04 | 02.04.07 | 2190 | 2519 |
| மேட்டுப்பாளையம் சாலை மொத்த காய்கனி மார்க்கெட் (புதிய கடைகள்) 16.5x7=116 | | | | | |
| 4 | 13 | 01.06.06 | 02.06.09 | 2041 | 2347 |
| 5 | 14 | 28.03.06 | 29.03.09 | 2030 | 2335 |
| 6 | 15 | 09.06.06 | 10.06.09 | 2099 | 2414 |
| 7 | 17 | 28.03.06 | 29.03.09 | 2300 | 2645 |
| 8 | 22 | 27.03.06 | 28.03.09 | 2070 | 2381 |
| 9 | 23 | 27.03.06 | 28.03.09 | 2070 | 2381 |
| 10 | 24 | 27.03.06 | 28.03.09 | 2099 | 2414 |
| தடாகம் ரோடு 10x22=220 | | | | | |
| 11 | 28 | 09.06.06 | 10.06.09 | 1430 | 1645 |
| 12 | 30 | 09.06.06 | 10.06.09 | 1430 | 1645 |
| தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி (வடக்கு) | | | | | |
| 13 | 1 | 25.08.06 | 26.08.09 | 1845 | 2122 |
| 14 | 5 | 25.08.06 | 26.08.09 | 2100 | 2415 |
| தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி (தெற்கு) | | | | | |
| 15 | 2 | 25.05.06 | 26.05.09 | 1560 | 1794 |
| 16 | 5 | 25.08.06 | 26.08.09 | 1700 | 1955 |

மேற்படி கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாத வாடகையில் 15% வாடகை உயர்வு செய்து மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்க கடைகளின் அளவு ஏற்கனவே உள்ள உரிம கட்டணம் உத்தேச நிர்ணய உரிம கட்டணம் ஆகிய விபரங்கள் அடங்கிய பட்டியலில் கண்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட உரிமதாரர்களுக்கு உரிமம் புதுப்பிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.2 நாள் 18.12.2009 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12497/08/A1 (மே)

## மாநகர மன்ற தீர்மனம் எண் 164 நாள் 29.12.2009

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 2 நாள் 18.12.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 26

பொருள்: கோவை மாநகராட்சி மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் - மேடைக் கடைகள் - மற்றும் உள்ள வணிக வளாக கடைகள் - 05.11.09-ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை – முடிவு செய்தல் - பற்றியது.

கோவை மாநகராட்சி மேட்டுப்பாளையம் ரோடு பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் 5x4=20 சதுரடி பரப்பளவு உள்ள 144 மேடைக் கடைகளை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP . No. 12892/2002-ல் 22.09.2003-ம் தேதி பிறப்பித்த உத்திரவில் மேற்படி பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் பூ வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு மேற்படி கடைகளை முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யுமாறு தீர்ப்பளித்துள்ளது. மேற்படி இத்தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட இடைக்கால விண்ணப்பங்கள் W.P.M.P.No.33466/03 & 33467/03 ஆகியவற்றை 4.10.2004-ல் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதை தொடர்ந்து 22.09.2003-ம் தேதிய நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி கடைகளை ஒதுக்கீடு செய்து இவ்வலுவலக செய்ல்முறைகள் ந.க.எண்.12173/2001/அ1 நாள் 12.10.2004-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி கடைகளுக்கு மாமன்ற தீர்மான எண்.34 நாள் 30.04.2002-ன்படி தினசரி வாடகையாக ரூ20- நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து வழக்கு எண். W.P.12892/02-ல் 22.09.2003 அன்று வழஙகியுள்ள தீர்ப்பினை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். 3816/2003-ல் 21.06.2005 அன்று சென்னை உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்ச் வழங்கிய தீர்ப்பில் இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.12173/2001/அ1-ன்படி 12.10.2004 அன்று கடைகளை ஒதுக்கீடு செய்து பிறப்பித்த உத்திரவை ரத்து செய்து பொது ஏலம் மூலமாக கடைகளை ஒதுக்கீடு செய்யுமாறு தீர்ப்பளித்துள்ளது. மேற்காண் தீர்ப்பினை எதிர்த்து மேற்படி மார்க்கெட்டிலுள்ள வியாபாரிகள் 89 கடைகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்து இடைக்கால தடை உத்திரவு பெற்றுள்ளனர். அதன் பின்பு உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்ச் மேல்முறையீடு வழக்கு எண்.W.A.No.3816/03-ல் கடந்த 21.06.2005-ம் தேதி வழஙகப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு உத்திரவுகள் ரத்து செய்யப்பட்டு மேடை கடைகள் பொது ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதன்படி 25.10.2005 மற்றும் 04.04.2007-ம் தேதி அன்றும் ஏலம் நடைபெற்று 144 மேடை கடைகளில் 111 கடைகளுக்கு ஏலதாரர்களுக்கு ஏற்கனவே கடை ஒதுக்கீடு வழங்கப்பட்டது போக ஏலத்தில் போகாத (வழக்குகளில் உள்ள கடைகள் நீங்கலாக) மீதமுள்ள 33 மேடை கடைகளுக்கு 5.11.2009-ம் அன்று பொது மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏலத் தொகைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

### <u>பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள்</u>

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு ரூ. | தினசரி வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏலத்-தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 1 | A7 | திரு.M.சேட் | 125 | - | 500 | 500 |
| 2 | A7 | திரு.S.ராஜா | 125 | - | 210 | - |
| 3 | A8 | திரு.M. ஷாஜஹான் | 125 | - | 475 | 475 |
| 4 | A8 | திரு.S. நந்தகுமார் | 125 | 250 | - | 250 |
| 5 | F63 | திரு.N.ரவிச்சந்திரன் | 100 | 30 | 30 | 30 |
| 6 | F63 | திரு.காதர் மொய்தீன் | 100 | 25 | 25 | - |

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு ரூ. | தினசரி வாடகை உச்ச கேள்வி தொகை | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏலத்-தொகை ரூ. | ஒப்பந்தப்-புள்ளி தொகை ரூ. | |
| 7 | F67 | திரு.V.சங்கீதா வெங்கடேஷ் | 100 | 30 | 30 | 30 |
| 8 | F67 | திரு.K.ஜெயக்குமார் | 100 | 25 | 25 | - |
| 9 | F68 | திரு.S.முகம்மது இக்பால் | 100 | 30 | 30 | 30 |
| 10 | F68 | திரு.V.R. கோவிந்தராஜ். | 100 | 20 | 20 | - |
| 11 | G73 | திரு.J.M.அனீபா | 50 | 35 | 30 | 35 |
| 12 | G73 | திருமதி.H.நூர்ஜஹான் | 50 | 30 | 20 | - |
| 13 | G74 | திரு.M.அப்துல் லத்தீப் | 40 | 30 | 30 | 30 |
| 14 | G74 | திரு.ஆர்.சிவகுமார் | 40 | 20 | 20 | - |
| 15 | G75 | திரு.S.அழகு | 40 | 30 | 30 | 30 |
| 16 | G75 | திரு.K.கிருஷ்ணன் | 40 | 25 | 20 | - |
| 17 | G76 | திரு.K.ராஜாமணி | 40 | 30 | 25 | 30 |
| 18 | G76 | திரு.M.அப்துல் அசீஸ் | 40 | 15 | 15 | - |
| 19 | G81 | திரு.P.சக்திவேல் | 40 | 30 | 20 | 30 |
| 20 | G81 | திரு.P.ராதாகிருஷ்ணன் | 40 | 25 | 30 | - |
| 21 | G83 | திரு.K.முருகவேல், ஜெயந்தி | 40 | 30 | 30 | 30 |
| 22 | G83 | திரு.S.ரமேஷ் | 40 | 20 | 25 | - |
| 23 | G84 | திரு.U.அசாருதீன் | 40 | 30 | 30 | 30 |
| 24 | G84 | திரு.M.சகாபுதீன் | 40 | 25 | 25 | - |
| 25 | G88 | திரு.H.அனீஸ் | 40 | 30 | 30 | 30 |
| 26 | G88 | திரு.S.முகம்மது அலி | 40 | 20 | 20 | - |
| 27 | H90 | திரு.A.S.ஹக்கீம் | 40 | 30 | - | 30 |
| 28 | H90 | திரு.A.K.இபுராஹிம் | 40 | 20 | - | - |
| 29 | H92 | திரு.M.அருண்சங்கர் | 40 | 30 | 30 | 30 |
| 30 | H92 | திரு.K.மணிகண்டன் | 40 | 25 | 15 | - |
| 31 | H95 | திரு.A. அப்துல்காதர் | 40 | 30 | - | 30 |
| 32 | H95 | திரு.M.P.மொய்தீன் | 40 | 25 | - | - |
| 33 | H96 | திரு.I.ஹாருண்ரஷீத் | 40 | 30 | 30 | 30 |
| 34 | H96 | திரு.H.ஹக்கீம் | 40 | 20 | 20 | - |
| 35 | H97 | திரு.M.ஜெகதீசன் | 40 | 30 | 25 | 30 |
| 36 | H97 | திரு.M.அப்துல் அசீஸ் | 40 | 20 | 20 | - |
| 37 | I-111 | திரு.M.நாகராஜ் | 125 | 35 | 35 | 35 |
| 38 | I-111 | திரு.K.A.அப்துல் ஜப்பார் | 125 | 30 | 20 | - |
| 39 | I-117 | திரு.S.காதர் மொய்தீன் | 125 | 40 | 36 | 40 |
| 40 | I-117 | திரு.V.சுந்தரம் | 125 | 30 | 21 | - |
| 41 | J-127 | திரு.D பூபதி | 40 | 30 | 30 | 30 |
| 42 | J-127 | திரு. M.மாணிக்கம் | 40 | 25 | 22 | - |
| 43 | J-129 | திரு.S.செந்தில்குமார் | 40 | 30 | 36 | 36 |
| 44 | J-129 | திரு.K.ஜெயகுமார் | 40 | 25 | 25 | - |
| 45 | J-133 | திரு.S.காதர் மொய்தீன் | 40 | 40 | 35 | 40 |
| 46 | J-133 | திரு.S.சிவசதீஷ்குமார் | 40 | 38 | 25 | - |
| 47 | J-141 | திரு.S. ஜாபர் அலி | 40 | 30 | 35 | 35 |
| 48 | J-141 | திரு.M. அபுதாஹிர் | 40 | 25 | 25 | - |
| 49 | J-143 | திரு.K. முஸ்தபா | 40 | 35 | 35 | 35 |
| 50 | J-143 | திரு.K. அக்பர் அலி | 40 | 32 | 23 | - |

மேற்படி பன்னீர்செல்வம் பூமார்க்கெட் கடைகள் அனைத்தும் 5 x 4 = 20 ச.அடி கொண்டவையாகும்.

1) கடை எண்.A7, A8 ஆகிய கடைகள் நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பைக் காட்டிலும் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வித் தொகை பெறப்பட்டுள்ளதால், மேற்படி கடைகளை சம்பந்தப்பட்ட உயர்ந்த பட்ச ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

2) கடை எண் G-73, G-74, G-75, G-76, G-81, G-83, G-84, G-88, H-90, H-92, H-95, H-96, H-97, I-111, I-117, J-127, J-129, J-133, J-141, J-143 ஆகிய 20 கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பைவிட குறைவாக ஏலக் கேள்வித் தொகை பெற்றிருந்தாலும், ஏற்கனவே 25.10.05, 4.4.07 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மறு ஏலத்தில் - கோரிய ஏலக் கேள்வித் தொகையை காட்டிலும் (தினசரி வாடகை ரூ.25) (மன்றத் தீர்மானம் நகல் இணைக்கப்பட்டுள்ளது.) அதிகப்படியாக உள்ளதாலும், மேற்படி கடைகளை உயர்ந்த பட்ச ஏலம் கோரிய நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

## D.B. ரோடு R.S.புரம் முதல் தள கட்டிடம்

| வ. எண் | கடை எண் | பெயர் | அரசு மார்க்கெட் மதிப்பு | மாத வாடகை உச்ச தொகை | | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | |
| 1 | முதல் தளம் | திரு.M.மகுடபதி | 1,14,000- | 72,000- | - | 72,000- |
| 2 | முதல் தளம் | திரு.A.M.நாசர் அலி | 1,14,000- | 70,000- | - | - |

3) D.B. ரோடு R.S. புரம் முதல் தள கட்டிடம் அரசு மார்க்கெட் மதிப்பைக் காட்டிலும் குறைவாக ஏலக் கேள்வித் தொகை பெற்றிருந்தாலும், மேற்படி கட்டிடம் 40 வருடங்களுக்கு மேலானது. இதில் கார் பார்க்கிங் வசதி எதுவும் இல்லை. Front Elevation வசதி இல்லை முதல் மாடிக்கு செல்ல 4 அடி அளவிற்கு மட்டுமே வழி தடம் உள்ளது. மற்றும் மேற்படி கட்டிடத்தை ஏற்கனவே வாடகைக்கு எடுத்திருந்த State Bank of India – மாத வாடகை ரூ.40,000- மட்டும் செலுத்தி வந்தது தற்சமயம் பெற்றுள்ள ஏலக் கேள்வித் தொகை அதைவிட கூடுதலாக 80%உள்ளதாலும். மேற்படி கட்டிடத்தை சம்பந்தப்பட்ட உயர்ந்த பட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

## மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்துகொள்ளாத கடைகள் விபரம்.

| வணிக வளாகம் உள்ள இடம் | | கடை எண்கள் |
|---|---|---|
| 1. பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள் | - | F -70, F-72, G-85, G-86, G-87, H-93, H-94, H-98 |
| 2. கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) | - | 4, 5, 6 |
| 3. தடாகம் ரோடு | - | 14, 22, 23 மற்றும் 26 |
| 4. சுப்ரி வீதி புதிய கடை | - | 4A |

4) பன்னீர் செல்வம் - பூ மார்க்கெட் மேடைக் கடைகள் கடை எண். F-63, F-67, F-68, ஆகிய கடைகள் நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பை விட குறைவாக ஏலக் கேள்வித் தொகை பெற்றுள்ளதால், மேற்படி கடைகளையும், தற்போது ஏலத்தில் போகாத 8 மேடைக் கடைகளையும் மற்றும் ஏலத்தில் போகாத கிருஷ்ணசாமி ரோடு வடக்கு கடை எண்கள்.4, 5, 6 , தடாகம் ரோடு கடைகள் 14, 22, 23 மற்றும் 26, சுப்ரி வீதி புதிய கடை எண்.4A ஆகிய கடைகளையும் மீண்டும் பொது மறு ஏலத்திற்கு கொண்டு வர வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.4, நாள் 19.11.2009 ல் அனுமதி வழங்கியுள்ளது. எனவே, மேற்படி பொருள் தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.5024/2006/ அ1 (மே)

**<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 165 நாள் 29.12.2009</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 4 நாள் 19.11.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 27

**பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண் 57 – பூசாரிபாளையம் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளது – பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் - தொடர்பாக.**

---------------

**கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 57, பூசாரிபாளையம் பகுதி சின்னசாமி நாயக்கர் தோட்டத்தில் புதிதாக சமுதாயக் கூடம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி தினவாடகை ரூ. 1200/- என உதவிப் பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.**

**மேற்காணும் வாடகை நிர்ணயம் செய்யவும் சமுதாயக் கூடத்தை உபயோகப்படுத்துபவர்களிடம் வைப்புத் தொகையாக ரூ. 5000/- பெற்று பின்னர் திரும்ப வழங்கவும், ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாயக் கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு கடந்த 26.10.2009ம் தேதியன்று பொருள் வைக்கப்பட்டிருந்தது.**

**மேற்படி பொருள் தொடர்பாக கடந்த 29.10.2009ம் தேதியன்று நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக் கூட்டத்தில் வார்டு எண். 57-ன் மாமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்பேரில், வரிவிதிப்பு, நிதிக்குழுத் தலைவர் மற்றும் ஆணையரின் உத்திரவில் மேற்படி சமுதாயக் கூடத்திற்கு தினசரி வாடகையாக ரூ. 500/- ம் வைப்புத்தொகையாக ரூ. 1000/-ம் என குறைத்து நிர்ணயம் செய்ய மேற்படி கூட்டத்தில் நிதிக்குழு தீர்மானம் எண். 1-ல் தீர்மானிக்கப்பட்டது.**

**எனவே மேற்படி சமுதாயக் கூடத்திற்கு தினசரி வாடகையாக ரூ. 500/-ம் வைப்புத்தொகையாக ரூ. 1000/-ம் என நிர்ணயம் செய்யவும், ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாயக் கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 6192/09/D1 (மே)**

**<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 166 நாள் 29.12.2009</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 1 நாள் 29.10.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 28

**பொருள்: கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் – காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் -தடம் 2-ல் சுற்றுச்சூழல் பற்றிய விவரம் தெரிவிக்கவும் - மின்னனு பலகை அமைக்க இடத்தினை மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.**

* * * * * *

**தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம துணை மேலாளர் (லேப்), மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கோவை-1 அவர்களின் 07.01.2009ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டதின் பேரில் கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், தடம்-2ல் மாநகராட்சி செலவில் 10x7 அளவிலான கட்டிடம் கட்டி அதில் 7.5 x 4.2 x 0.5மீ நீள அகலமுள்ள மின்னனு விளம்பர பலகை அமைத்து காற்றின் தரம் பற்றிய தகவல்களை தெரிவிக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் நாள் 20.2.2009-ல் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.**

தற்பொழுது தடம்-2ல் புதியதாக கட்டப்பட்டுள்ள 100 ச.அடி. பரப்பளவுள்ள அறையை மேற்படி துறையின் உபயோகத்திற்கு அதற்கான வாடகை பிரதி மாதம் ஒன்றிக்கு ரூ.4093/- வீதத்தில் வழங்குவதற்கும் மின்னனு பலகை அமைத்து சுற்றுச்சூழல் பற்றிய விவரங்களை பொது மக்களுக்கு தெரிவிக்கவும், மாநகராட்சி சம்மந்தமான விழிப்புணர்வு வாசகங்களை Display மூலமாக விளம்பரப்படுத்த வேண்டும் மற்றும் வருடத்திற்கு 5 % வாடகைத் தொகையினை உயர்வு செய்யப்படும் என்கின்ற நிபந்தனைகளுடன் இடத்தினை மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 282/2009/டி1 தெ

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 167 நாள் 29.12.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 29

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகையினமான தியாகி குமரன் மார்கெட் மற்றும் இராமர் கோயில் மார்கெட் ஆகியவற்றில் வசூலிக்கப்படும் கட்டண விகிதங்கள் மிக குறைவாக உள்ளதாலும், இவை நிர்ணயம் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டதாலும் இக்கட்டண விகிதங்களை உயர்வு செய்து அளிக்குமாறு மேற்படி இனங்களின் குத்தகை தாரர்கள் விண்ணப்பம் அளித்துள்ளனர்.

மேற்படி குத்தகைதாரர்களின் கோரிக்கையின் அடிப்படையில் மாநகராட்சி குத்தகை இனங்களில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் கட்டண விகிதங்களை கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>மார்கெட்டுகளில் வசூலிக்கப்படும் கட்டண விகிதங்கள்</u>

| வ. எண் | இனம் | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் (ரூ.) | உயர்வு செய்யப்படும் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| 1. | கூரை போடப்பட்டுள்ள இடத்தில் 6 x 4 அடிக்கு மற்றும் அதற்கும் குறைவான இடத்திற்கு (மா.ந.ம.தீ.எண்.230 நாள் 05.01.2005) | ரூ. 12.50 | 25 |
| 2. | கூரை போடாத கடைகள் ஒவ்வொன்றுக்கு 6 x 4 அடிக்கும் குறைவான இடத்திற்கு | ரூ. 5.00 | 10 |
| 3. | வெற்றிலைக்கடை கோட்டை 1-க்கு 10,000 அல்லது அதன் பாகத்திற்கு | ரூ. 4.00 | 10 |
| 4. | வெற்றிலை சுமை ஒன்றுக்கு (6 ஆயிரம் கொண்டது அல்லது அதன் பாகம்) | ரூ. 2.00 | 5 |
| 5. | உள்ளூர் வெற்றிலை பலகை 1க்கு 4 மொத்தை | ரூ. 2.00 | 5 |
| 6. | கீரை வகைகள் - தலைச்சுமை 1க்கு | ரூ. 2.00 | 5 |
| 7. | தலைச்சுமை 1க் கு நுழைவுக் கட்டணம் (பழங்கள், காய்கறிகள், கிழங்குகள்) | ரூ. 2.00 | 5 |
| 8. | லாரி 1க்கு நுழைவுக் கட்டணம் | ரூ. 30.00 | 100 |
| 9. | இரட்டை மாட்டு வண்டி 1க்கு நுழைவுக் கட்டணம் | ரூ. 10.00 | 10 |
| 10. | ஒற்றை மாட்டு வண்டி 1க்கு நுழைவுக் கட்டணம் | ரூ. 8.00 | 10 |
| 11. | டெம்போ 1க்கு நுழைவுக் கட்டணம் | ரூ. 20.00 | 50 |
| 12. | மினி டோர் ஆட்டோ நடை ஒன்றுக்கு (மாமன்ற தீர்மான எண் 257 நாள். 27.01.06 | ரூ.15 | 40 |

<u>இதர குத்தகை இனங்களில் தற்போது வசூலிக்கப்படும் கட்டணங்களையும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு செய்யலாம்.</u>

| வ. எண் | இனம் | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் (ரூ.) | உயர்வு செய்யப்படும் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| **1.** | **கட்டண கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்** | | |
| | 1. சிறுநீர் கழிக்க நபர் ஒன்றுக்கு | 1.00 | 1.00 |
| | 2. கழிப்பிட கட்டணம் | 1.00 | 1.00 |
| | 3. குளியல் அறை கட்டணம் | 3.00 | 3.00 |
| **2.** | **இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் இடம் (6 மணி நேரத்திற்கு)** | | |
| | 1. சைக்கிள் ஒன்றுக்கு | 2.00 | 2.00 |
| | 2. மொபட், ஸ்கூட்டர் மற்றும் பைக் | 5.00 | 5.00 |
| | 3. நான்கு சக்கர வாகனங்களுக்கு | 10.00 | 10.00 |
| | 4. டூரிஸ்ட் பஸ் மற்றும் வேன்கள் | 10.00 | 50.00 |
| **3.** | **வ.உ.சி பூங்கா மிருக காட்சி சாலை மற்றும் சிறுவர் விளையாடும் இடம்** | | |
| | **1. மிருக காட்சி சாலை** | | |
| | பெரியவர்களுக்கு | 3.00 | 3.00 |
| | சிறியவர்களுக்கு | 2.00 | 2.00 |
| **4.** | **வ.உ.சி பூங்கா சிறுவர் இரயில் கட்டணம்** | | |
| | பெரியவர்களுக்கு | 1.50 | 3.00 |
| | சிறியவர்களுக்கு | 1.00 | 2.00 |
| **5.** | **ஆடு அறுவை மனையில் வசூலிக்கப்படும் கட்டணம் (ஆடு ஒன்றுக்கு)** | 5.00 | 10.00 |

மேற்குறிப்பிட்டுள்ள விபரப்படி கட்டணங்கள் உயர்வு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 12 நாள். 18.12.09-ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக் குறிப்பு</u>: அனுமதிக்கலாம் ந.க.எண். 10455/2009/அ1

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 168 நாள் 29.12.2009</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 12 நாள் 18.12.09 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.இக்கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 30

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2009-2010 ஆம் வருட குத்தகை இனமான நவீன பொதுக் கழிப்பிடம் (டவுன்ஹால் அருகில்) கட்டணம் வசூலிக்கும் உரிமையினை ரூ 10,93,000/-க்கு வசந்தமலர் மகளிர் சுயஉதவிக் குழுவினர் உரிமம் பெற்றுள்ளனர். சூமற்படி கழிப்பிடமானது பராமரிப்பு பணி செய்வதற்காக இரண்டு மாதங்கள் கழிப்பிடம் பயன்படுத்தாத நிலையில் இருந்துள்ளதால், இக்காலங்களுக்கு தங்களால் செலுத்தப்பட்ட உரிமத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளனர்.

மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் வார்டு எண். 40-க்குட்பட்ட உதவி பொறியாளர், தனது 30.09.2009-ஆம் தேதிய குறிப்பில் மேற்படி கழிப்பிடமானது மார்ச் மற்றும் ஏப்ரல் 2009 ஆகிய இரண்டு மாதங்கள் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் கழிப்பிடம் பயன்படுத்தாத நிலையில் இருந்துள்ளது. இதனால் ஏலதாரர் கோரும் இரண்டு மாதங்களுக்கான உரிமத் தொகையினை திரும்ப வழங்கலாம் என குறிப்பு அளித்துள்ளார்.

எனவே உதவி பொறியாளரின் குறிப்பின்படி பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதால் உபயோகப்படுத்தாமல் இருந்த இரண்டு மாதங்களுக்கான உரிமத் தொகை ரூ. 1,82,166/-னை திரும்ப வழங்குவதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 13 நாள் 18.12.09-ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 10231/2009/அ1

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 169 நாள் 29.12.2009</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 13 நாள் 18.12.09. ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 31

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - தமிழ் நாடு மின்சார வாரியம் (மெட்ரோ) அலுவலகம் - மாற்றம் - வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

******

வார்டு எண் 27 டாக்டர் நஞ்சப்பா சாலையில் மாநகராட்சி உயர்நிலை பள்ளி வளாகத்தில் தமிழ் நாடு மின்சார வாரியம் (மெட்ரோ) அலுவலகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கண்காணிப்பு பொறியாளர், தமிழ் நாடு மின்சார வாரியம் (மெட்ரோ) கோவை அவர்களின் 18.08.09ந் தேதிய கடிதத்தில் மேற்படி பள்ளி வளாகத்தில் மின்சார வாரிய அலுவலகம் இயங்கி வரும் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், காளிஸ்வரா நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி இடத்திற்கு மாற்றி கொடுக்குமாறு கேட்டுள்ளார், இக்கட்டிடத்திற்கு பொதுமக்கள் அதிகப்படியாக வந்து செல்வதால் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக இளநிலை பொறியாளர் அறிக்கை அளித்துள்ளார்.

தற்போது இப்பள்ளி வளாகத்தில் முன்புறம் உயர்கல்வி மாணவர்களுக்கான கணிணி பயிற்சி படிப்பு நூலகத்திற்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நூலகத்திற்கு வருகை தரும் மாணவர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு போதிய இடவசதி இல்லை.

எனவே மிகவும் பழுதடைந்துள்ள மின்வாரிய அலுவலக கட்டிடத்தினை முழுமையாக இடித்து விட்டு உயர்கல்வி மாணவர்களுக்கான கணிணி பயிற்சிக்கு வருகின்ற மாணவர்களின் வாகனங்கள் நிறுத்துமிடமாக உபயோக படுத்தப்பட வேண்டியுள்ளதால் மின்வாரிய அலுவலகத்தினை தற்போது காலியாக உள்ள காளிஸ்வரா நகர் அரசு அருங்காட்சியமாக செயல் பட்டு வந்த மாநகராட்சி கட்டிடத்திற்கு மாற்றம் செய்யவும் இந்த இடத்திற்கான வாடகை விகிதத்தினை பொதுபணி துறையினரின் வழிகாட்டு மதிப்பின் படி கணக்கிடப்பட்ட மாதாந்திர வாடகை ரூ.52167 என நிர்ணயம் செய்யவும் வருடத்திற்கு 5% வாடகைத் தொகையினை உயர்வு செய்யப்படும் என்கின்ற நிபந்தனைகளோடு கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் (மெட்ரோ) அவர்களுக்கு மேற்படி இடத்தினை ஒப்படை செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 11385 /2009/டி1 தெ

**மாநகர மன்ற தீர்மனம் எண் 170 நாள் 29.12.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 32

பொருள்: கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வணிக வளாக கடைகளுக்கு உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

பார்வை: 1) அரசாணை (நிலை எண்) 92 நாள்.03.07.07.
2) வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மான எண்.11 நாள். 18.12.09.

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள வணிக வளாகங்களில் உள்ள கடைகளில் உரிமம் புதுப்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ள கடைகளுக்கு அரசாணை (நிலை எண்) 92 நாள். 03.07.2007 தெரிவித்துள்ளபடி மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து முந்தைய வாடகையிலிருந்து 15% வாடகை உயர்வு செய்யலாம்.

1) டாக்டர் நஞ்சப்பா ரோடு வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | V. சுந்தர்ராஜ் | 4,399/- | 01.04.2009 – 31.03.2012 | 5059 |
| 2 | ஹக்கீம் | 3,843/- | 01.04.2009 – 31.03.2012 | 4419 |
| 3 | பழனிசாமி | 3,674/- | 01.04.2009 – 31.03.2012 | 4225 |
| 4 | சாமாநாய்டு | 3,928/- | 01.04.2009 – 31.03.2012 | 4517 |
| 5 | ராமசாமி | 3,412/- | 01.04.2009 – 31.03.2012 | 3924 |
| 6 | தேவராஜ் | 3,623/- | 01.04.2009 – 31.03.2012 | 4166 |
| 7 | துளசிராஜ் | 3,865/- | 01.04.2009 – 31.03.2012 | 4445 |
| 8 | ஜெகதீசன் | 4,087/- | 01.04.2009 – 31.03.2012 | 4700 |
| 9 | தேவராஜ் | 4,399/- | 01.04.2009 – 31.03.2012 | 5059 |
| 10 | ராமகிருஷ்ணன் | 3,608/- | 01.04.2009 – 31.03.2012 | 3528 |
| 11 | பி.கே.,ராஜீ | 5,173/- | 01.04.2009 – 31.03.2012 | 5949 |
| 12 | பழனிசாமி | 5,580/- | 01.04.2009 – 31.03.2012 | 6417 |
| 13 | கோபால் | 4,914/- | 01.04.2009 – 31.03.2012 | 5651 |
| 14 | ராமகிருஷ்ணன் | 6,673/- | 01.04.2009 – 31.03.2012 | 7674 |
| 15 | ஜாமீதுஅகமது | 8,273/- | 01.04.2009 – 31.03.2012 | 9514 |
| 16 | முத்துகுமார் | 8,787/- | 01.04.2009 – 31.03.2012 | 10105 |
| 17 | சீதாராமன் / ஆனந் | 8,787/- | 01.04.2009 – 31.03.2012 | 10105 |
| 18 | ABT Parcel Service | 9,200/- | 01.04.2007 – 31.03.2010 | 10580 |
| 19 | ரகுராம் | 7,805/- | 01.04.2009 – 31.03.2012 | 8976 |
| 20 | துரைசாமி | 8,581/- | 01.04.2009 – 31.03.2012 | 9868 |
| 21 | சந்திரகாந்தி | 4,548/- | 01.04.2009 – 31.03.2012 | 5230 |
| 22 | வெங்கடேசன் | 4,497/- | 01.04.2009 – 31.03.2012 | 5172 |
| 23 | ஜெயக்குமார் | 6,468/- | 01.04.2009 – 31.03.2012 | 7438 |

2) அவிநாசி ரோடு வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 5 | பிரஸ் கிளப் | 760/- | 01.04.2005 – 31.03.2008 | 874/- |
| 10 | பிரஸ்கிளப் | 760/- | 01.04.2005 – 31.03.2008 | 874/- |
| 18 | ABTParcel Service | 4,485/- | 01.04.2006 – 31.03.2009 | 5158/- |
| 19 | ABT Parcel Service | 4,485/- | 01.04.2006 – 31.03.2009 | 5158/- |
| 20 | பிரஸ் கிளப் | 760/- | 01.04.2006 – 31.03.2009 | 874/- |
| 21 | பிரஸ் கிளப் | 760/- | 01.04.2008 – 31.03.2011 | 874/- |

3) முத்து விநாயகர் கோயில் வீதி

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 3 | விஸ்வகர்மா | 3,441/- | 01.04.2009– 31.03.2012 | 3957/- |
| 4 | விஸ்வகர்மா | 3,441/- | 01.04.2009– 31.03.2012 | 3957/- |
| 5 | மூகாம்பிகை மணி | 3,910/- | 01.04.2009– 31.03.2012 | 4497/- |
| 6 | ரங்கராஜ் | 3,910/- | 01.04.2009– 31.03.2012 | 4497/- |
| 7 | மனோகரன் | 4,255/- | 01.04.2009– 31.03.2012 | 4893/- |
| 8 | ஜவர் ஆறுமுகம் | 5,750/- | 01.04.2009– 31.03.2012 | 6613/- |
| 9 | கே.கே. நாஸர் | 12,995/- | 01.04.2009– 31.03.2012 | 14944/- |

4) காந்திபுரம் நகர பேருந்து (மேற்கு) (உடல் ஊனமுற்றோர் கடைகள்)

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | செல்வி. K.விமலா | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/- |
| 2 | K.முத்துசாமி | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 3 | M.அபாஸ் | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 4 | T.S.மணி | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 5 | S.ரவி | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 6 | A.சின்னசாமி | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 7 | M.துரை | 403/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 8 | H.M. ஹானிபா | 350/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 9 | K.ஜெயராமன் | 350/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |
| 9A | A.பாலன் | 350/- | 01.04.2009 – 31.03.2012 | 463/ |

5) மத்திய பேருந்து நிலையம் வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | சின்னதுரை | 5,083/- | 01.04.2009 – 31.03.2012 | 5845/- |
| 2 | பத்ருசாமன் | 3,910/- | 01.04.2009 – 31.03.2012 | 4497/- |
| 3 | வேணு கோபால் | 3,560/- | 01.04.2009 – 31.03.2012 | 4094/- |
| 4 | கண்ணன் | 2,735/- | 01.04.2009 – 31.03.2012 | 3145/- |
| 5 | தினகரன் | 3,526/- | 01.04.2009 – 31.03.2012 | 4054/- |
| 6 | அப்துல்ரஷீது | 3,560/- | 01.04.2009 – 31.03.2012 | 4094/- |
| 7 | ராஜாமணி | 3,988/- | 01.04.2009 – 31.03.2012 | 4586/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | முகமது மொய்தீன் | **3,910/-** | 01.04.2009 – 31.03.2012 | **4497/-** |
| 9 | அபூட்டி | **4379/-** | 01.04.2009 – 31.03.2012 | **5034/-** |
| 10 | அப்துல்ஹமீது | **3,912/-** | 01.04.2009 – 31.03.2012 | **4499/-** |
| 11 | சின்னு | **2,346/-** | 01.04.2009 – 31.03.2012 | **2698/-** |
| 12 | கிருஷ்ணன் | **3,912/-** | 01.04.2009 – 31.03.2012 | **4498/-** |
| 13 | ரகுபதி | **6,254/-** | 01.04.2009 – 31.03.2012 | **7192/-** |
| 14 | சீதாலட்சுமி | **6,222/-** | 01.04.2009 – 31.03.2012 | **7155/-** |
| 15 | கண்ணமாறன் | **3,126/-** | 01.04.2009 – 31.03.2012 | **3595/-** |
| 16 | கண்ணமாறன் | **4,690/-** | 01.04.2009 – 31.03.2012 | **5394/-** |
| 17 | ராஜன் | **5,513/-** | 01.04.2009 – 31.03.2012 | **6341/-** |
| 18 | தங்கவேலு | **5,824/-** | 01.04.2009 – 31.03.2012 | **6698/-** |
| 19 | கிருஷ்ணன் | **2,387/-** | 01.04.2009 – 31.03.2012 | **2745/-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | லட்சுமணன் | **28,426/-** | 01.04.2009 – 31.03.2012 | **32690/-** |
| 21 | மீனாம்பாள் | **22,664/-** | 01.04.2009 – 31.03.2012 | **26064/-** |
| 24 | லட்சுமணன் | **11,468/-** | 01.04.2009 – 31.03.2012 | **13188/-** |
| 25 | மீனாம்பாள் | **1,840/-** | 01.04.2009 – 31.03.2012 | **2116/-** |
| 26 | லட்சுமணன் | **1,603/-** | 01.04.2009 – 31.03.2012 | **1843/-** |

6) என்.எச்.ரோடு (புதிய கடைகள்)

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 4 | விஜயலட்சுமி | 10,746/- | 01.04.2009 - 31.03.2012 | **12358/-** |

7) உக்கடம் பேருந்து நிலைய வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | பதுருதீன் | 8,464/- | 01.04.2009 – 31.03.2012 | **9734/-** |
| 2 | பதுருதீன் | 7,142/- | 01.04.2009 – 31.03.2012 | **8213/-** |
| 4 | பதுருதீன் | 5,463/- | 01.04.2009 – 31.03.2012 | **6282/-** |

8) ஒப்பணக்கார வீதி வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 4 | **C.K.**ஜோசப் | 1,581/- | 01.04.2009 – 31.03.2012 | **1818/-** |
| 7 | அப்துல் கலாம் | 1,278/- | 01.04.2009 – 31.03.2012 | **1470/-** |
| 8 | **K.**ஜோசப் | 1,408/- | 01.04.2009 – 31.03.2012 | **1619/-** |

9) உப்புகிணர் சந்து வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 2 | அலெக்ஸாண்டர் | 6,305/- | 01.04.2009– 31.03.2012 | **7251/-** |
| 3 | பார்வதி | 15,129/- | 01.04.2009– 31.03.2012 | **17398/-** |

10) திரு.வி.க.மார்க்கெட் வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 25 | அய்யாசாமி | 5,865/– | 01.04.2009 – 31.03.2012 | 6745/– |
| 26 | கணேசன் | 2,300/– | 01.04.2009 – 31.03.2012 | 2645/– |
| 27 | சாந்தி ஜெகதிசன் | 2,300/– | 01.04.2009 – 31.03.2012 | 2645/– |
| 29 | கோகிலா | 2,300/– | 01.04.2009 – 31.03.2012 | 2645/– |
| 30 | சஜிதா | 2,300/– | 01.04.2009 – 31.03.2012 | 2645/– |
| 31 | அம்பலவாணன் | 2,933/– | 01.04.2009 – 31.03.2012 | 3372/– |
| 32 | மணீஸ் | 600/– | 01.04.2009 – 31.03.2012 | 690/– |
| 33 | சித்ரா | 650/– | 01.04.2009 – 31.03.2012 | 748/– |
| 34 | எம். ராஜா | 660/– | 01.04.2009 – 31.03.2012 | 748– |
| 35 | கிருஷ்ணமுர்த்தி | 800/– | 01.04.2009 – 31.03.2012 | 920/– |
| 36 | காளிதாஸ் | 650/– | 01.04.2009 – 31.03.2012 | 748/– |
| 37 | எம்.எஸ். ரமேஷ் | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 38 | வெண்ணிஸ்லா பிரபு | 650/– | 01.04.2009 – 31.03.2012 | 748/– |
| 39 | கே.பி.சுரேஸ் | 1,100/– | 01.04.2009 – 31.03.2012 | 1265/– |
| 40 | கே.சீனிவாசன் | 1,100/– | 01.04.2009 – 31.03.2012 | 1265/– |
| 41 | பாபுராஜ் | 1,050/– | 01.04.2009 – 31.03.2012 | 1208/– |
| 42 | கார்த்தி | 600/– | 01.04.2009 – 31.03.2012 | 690/– |
| 43 | ரமேஷ்குமார் | 600/– | 01.04.2009 – 31.03.2012 | 690/– |
| 44 | காளிதாஸ் | 1,550/– | 01.04.2009 – 31.03.2012 | 1783/– |
| 45 | ரமேஷ் | 1,300/– | 01.04.2009 – 31.03.2012 | 1495/– |
| 46 | ரவிச்சந்திரன் | 1,650/– | 01.04.2009 – 31.03.2012 | 1898/– |
| 47 | ராஜீ | 2,000/– | 01.04.2009 – 31.03.2012 | 2300/– |
| 48 | கே. ராஜீ | 1,850/– | 01.04.2009 – 31.03.2012 | 2128/– |
| 49 | ராஜகணபதி | 2,150/– | 01.04.2009 – 31.03.2012 | 2479/– |
| 50 | சம்சுதீன் | 2,933/– | 01.04.2009 – 31.03.2012 | 3372/– |
| 51 | எ.சாகுல் அமீது | 2,933/– | 01.04.2009 – 31.03.2012 | 3372/– |
| 52 | சகாபுதீன் | 2,300/– | 01.04.2009 – 31.03.2012 | 2645/– |
| 53 | எம்.கருணாநிதி | 2,128/– | 01.04.2009 – 31.03.2012 | 2447/– |
| 55 | K.சுஜிதா | 1,969/– | 01.04.2009 – 31.03.2012 | 2264/– |
| 56 | S.சங்கர் | 3,074/– | 01.04.2009 – 31.03.2012 | 3535/– |
| 57 | கே. சீனிவாசன் | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 58 | ஆனந்தகுமார் | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 59 | சீனிவாசன் | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 60 | சலீம் | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 61 | சலீம் | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 62 | வீ. குட்டி | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |
| 63 | ரவி | 550/– | 01.04.2009 – 31.03.2012 | 633/– |

11) காந்திபுரம் நகரபேருந்து – உடல் ஊனமுற்றோர் வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 5 | அம்பிகாவதி | 2300/- | 01.04.2009 – 31.03.2012 | 2645/- |
| 6 | அமிர்தலிங்கம் | 2270/- | 01.04.2009 – 31.03.2012 | 2611/- |
| 7 | சி.வி. பாலு | 2150/- | 01.04.2009 – 31.03.2012 | 2473/- |
| 8 | பி. குர்ஷித் பேகம் | 2150/- | 01.04.2009 – 31.03.2012 | 2473/- |
| 9 | பி. எஸ். ஞானபால் | 2275/- | 01.04.2009 – 31.03.2012 | 2616/- |
| 10 | எஸ். ராஜலட்சுமி | 2050/- | 01.04.2009 – 31.03.2012 | 2358/- |

12) உக்கடம் பேருந்து நிலையம் எடை காட்டும் இயந்திரம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 3 | **Eastern Scales Pvt. Ltd** | 1,190/- | 01.04.2009 – 31.03.20012 | 1369/- |
| 4 | **Eastern Scales Pvt. Ltd** | 1,190/- | 01.04.2009 – 31.03.20012 | 1369/- |
| 5 | **Eastern Scales Pvt. Ltd** | 1,190/- | 01.04.2009 – 31.03.20012 | 1369/- |

13) வ.உ.சி. பூங்கா கடைகள்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | சுரேஷ் | 4,300/- | 01.042009 - 31.03.2012 | 4945/- |
| 2 | ரமேஷ் | 2,650/- | 01.042009 - 31.03.2012 | 3048/- |

14) ஆடிஸ் வீதி வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | ஐயூப்கான் | 420/- | 01.04.2009 – 31.03.2012 | 483/- |
| 2 | P.பொன்னுசாமி | 420/- | 01.04.2009 – 31.03.2012 | 483/- |

15) போத்தனூர் ரோடு வணிக வளாகம்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | டேவிட் அற்புதசாமி | 3460/- | 01.04.2009 – 31.03.2012 | 3979/- |
| 2 | ரங்கநாதன் | 2304/- | 01.04.2009 – 31.03.2012 | 2650/- |
| 3 | எஸ்.எம்.இப்ராஹீம் | 3460/- | 01.04.2009 – 31.03.2012 | 3979/- |
| 4 | பழனியப்பன் | 2305/- | 01.04.2009 – 31.03.2012 | 2650/- |
| 5 | துரைசாமி | 1449/- | 01.04.2009 – 31.03.2012 | 1666/- |
| 6 | தனுஸ்கோடி | 1449/- | 01.04.2009 – 31.03.2012 | 1666/- |
| 7 | மெய்தீன் | 1449/ | 01.04.2009 – 31.03.2012 | 1666/- |
| 8 | எம்.டி. குஞ்சு | 1449/ | 01.04.2009 – 31.03.2012 | 1666/- |
| 9 | சுலைமான் | 1449/ | 01.04.2009 – 31.03.2012 | 1666/- |
| 10 | சுந்தரன் | 2305/- | 01.04.2009 – 31.03.2012 | 2650/- |
| 11 | மேத்யூ | 2305/ | 01.04.2009 – 31.03.2012 | 2650/- |
| 12 | அப்துல் அஜீத் | 2305/ | 01.04.2009 – 31.03.2012 | 2650/- |

16) ம.ந.க. வீதி கடைகள்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | ஜே. மோகன்ராஜ் | 1150/- | 01.04.2008 – 31.03.2011 | 1323/- |
| 2 | ஜே. மோகன்ராஜ் | 1050/- | 01.04.2008 – 31.03.2011 | 1208/- |

17) தர்மராஜ் கோயில் வீதி கடைகள்

| கடை எண் | பெயர் | தற்போதைய மாத வாடகை | உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|
| 1 | கே. கணேஷன் | 1668/- | 01.04.2008 – 31.03.2011 | 1918/- |
| 2 | முத்தைய்ய செட்டியார் | 1668/- | 01.04.2008 – 31.03.2011 | 1918/- |

மேற்படி வணிக வளாக கடைகளுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி முந்தைய வாடகையிலிருந்து 15% வாடகை உயர்வு செய்து மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பிப்பு செய்வதற்கு வரி விதிப்பு மற்றும் நிதி குழு தனது தீர்மான எண். 11 நாள். 18.12.09 ல் அனுமதி அளித்துள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> அனுமதிக்கலாம். ந.க.எண். 11415/2009/அ1

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 171 நாள் 29.12.2009</u>

பொருளில் வரிசை எண். 2, அவினாசிரோடு வணிக வளாகம் கடை எண். 5, 10 மற்றும் 20-க்கு உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் 1.4.08 முதல் 31.03.2011 எனவும், கடை எண் 18 மற்றும் 19-ற்கு உரிமம் புதுப்பிக்கப்படும் காலம் 1.4.09 முதல் 31.03.2012 எனவும் திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 11 நாள் 18.12.2009ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 33

பொருள் : மாநகராட்சி இர.ச.புரம் மேற்கு ஆரம்பப்பள்ளி மற்றும் மாநகராட்சி கென்வின் நடுநிலைப்பள்ளி – மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாக அருகிலுள்ள பள்ளிகளுடன் இணைத்தல் - சார்பு.

கோயம்புத்தூர் மாநகராட்சி இர.ச.புரம் மேற்கு ஆரம்பப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை கீழ்கண்டவாறு மாணவர் எண்ணிக்கை உள்ளது.

| வகுப்பு | பதிவு ஆ +பெ= மொத்தம் | வருகை ஆ +பெ= மொத்தம் |
|---|---|---|
| முதல் வகுப்பு | 1+2=3 | 1+1=2 |
| இரண்டாம் வகுப்பு | 3+0=3 | 3+0=3 |
| மூன்றாம் வகுப்பு | 3+2=5 | 3+2=5 |
| நான்காம் வகுப்பு | 4+2=6 | 4+2=6 |
| ஐந்தாம் வகுப்பு | 6+3=9 | 6+3=9 |
| மொத்தம் | 17+9=26 | 17+8=25 |

இப்பள்ளியில் மாணவர் மொத்தப் பதிவும், வருகையும் குறைவாக உள்ளதால் இப்பள்ளியை அருகிலுள்ள மாநகராட்சி இர.ச.புரம் வடக்கு ஆரம்பப் பள்ளியுடன் இணைத்தல் சார்ந்தும், மாநகராட்சி கென்வின் நடுநிலைப்பள்ளியில் 1 முதல் 8 வகுப்புகள் வரை செயல்படுகின்றன. கீழ்கண்டவாறு மாணவர் எண்ணிக்கை உள்ளது.

| வகுப்பு | பதிவு<br>ஆ +பெ= மொத்தம் | வருகை<br>ஆ +பெ= மொத்தம் |
|---|---|---|
| முதல் வகுப்பு | 1+2=3 | 1+2=3 |
| இரண்டாம் வகுப்பு | 4+1=5 | 4+1=5 |
| மூன்றாம் வகுப்பு | 2+2=4 | 1+1=2 |
| நான்காம் வகுப்பு | 3+0=3 | 3+0=3 |
| ஐந்தாம் வகுப்பு | 1+1=2 | 1+1=2 |
| ஆறாம் வகுப்பு | 2+0=2 | 1+0=1 |
| ஏழாம் வகுப்பு | 0+3=3 | 0+3=3 |
| எட்டாம் வகுப்பு | 2+3=5 | 2+2=4 |
| மொத்தம் | 15+12=27 | 13+10=23 |

இப்பள்ளியிலும் மாணவர் மொத்தப் பதிவும், வருகையும் மிகக்குறைவாக உள்ளதால், இப்பள்ளியை அருகிலுள்ள மாநகராட்சி வெட்டர்பர்ன் பேட்டை நடுநிலைப்பள்ளியுடன் இணைக்கலாம்.

மேற்படி பள்ளிகள் இணைத்தல் சார்ந்து மாநகராட்சி கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண். 16 நாள் 26.11.2009-யின் படி பள்ளி கட்டிடங்களை கல்வி தவிர பிற உபயோகங்களுக்கு பயன்படுத்தாமல் நல்லமுறையில் பராமரித்து வைத்துகொள்ளும் பணியினை பொறியியற் பிரிவு மேற்கொள்ள வேண்டும் என தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.

எனவே, மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாக மாநகராட்சி இர.ச.புரம் (மேற்கு) ஆரம்பப்பள்ளியை மாநகராட்சி இர.ச.புரம் (வடக்கு) ஆரம்பப்பள்ளியுடனும், மாநகராட்சி கென்வின் நடுநிலைப்பள்ளியை மாநகராட்சி வெட்டர்பர்ன் பேட்டை நடுநிலைப்பள்ளியுடனும் இணைத்தல் சார்ந்து மாமன்ற அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். 13372/2009/கே.3

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 172 நாள் 29.12.2009</u>

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தீர்மானம் எண். 16 நாள் 26.11.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 34

பொருள் - மாமன்ற தீர்மான எண்.28 நாள்.15.06.2009ன்படி குடிநீர் கட்டணம் அமைத்தல் மற்றும் குடிநீர் விநியோக துணை விதிகள் மற்றும் துணை விதிகளுக்கு மாமன்ற ஒப்பதல் வழங்க பொருள் வைக்கப்பட்டது. மீண்டும் இப்பொருள் அவசரம் அவசியத்தை கருதி மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

\- - - - - -

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பில்லூர் 2-வது தனி குடிநீர் திட்டப்பணிகள் ரூ.113.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் பணி அடுத்த ஆண்டு (2010 இறுதியில்) முடிவுறும் பொழுது திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.140 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.113.74 கோடியில் 70 சதவீத மானிய நிதிபோக மீதமுள்ள 30 விழுக்காடு மாநகராட்சி பங்கு தொகை மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கும் கூடுதலான ஒப்பந்தத் தொகையுடன் சேர்த்து மாநகராட்சி ரூ..50.00 கோடிக்கும் மேலாக மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது.

பில்லூர் இரண்டாம் திட்டம் முடிவடைந்து மாநகருக்கு கூடுதல் குடிநீர் பெறப்பட்ட பின்பு மாநகர் முழுவதற்கும் 24 மணிநேரமும் குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மேற்படி திட்ட வரைவு இறுதி வடிவம் பெறப்பட உள்ளது. திட்ட இறுதி வரைவு ஒப்புதல் பெறப்பட்டு செயலாக்கப்படும் பொழுது மாநகராட்சிக்கு கூடுதல் நிதி தேவைப்படும். மேலும் பரிட்சார்ந்த முறையில் ஒரு சில வார்டுகளில் மேற்படி திட்டம் அமுல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பழைய மற்றும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை கீழ்கண்டவாறு வசூல் செய்து குழாய் இணைப்பினை முறைப்படுத்தவும் குடிநீர் விநியோக துணை விதிகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உரிய திருத்தம் செய்து நடைமுறைப்படுத்த நகராட்சி நிர்வாக அலுவலகம் பொது அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏற்கனவே மாமன்றம் 23.07.2007ம் தேதிய தீர்மான எண்.79-ன்படி 01.06.2008 தேதி முதல் திருத்தி அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ள குடிநீர் கட்டண விபரம்

**அட்டவணை 1**

**(அ) வீட்டு உபயோகம் முறையில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புக்கு உண்டான குடிநீர் கட்டண விபரம்.**

| வரிசை எண் | நீர் விநியோக முறை | வீட்டின் குழாய் இணைப்பிற்கு | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம். எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|---|
| அ | வீட்டு காரியங்களுக்கு | அ. இலவச விநியோகம் நாள் ஒன்றுக்கு 1000 லிட்டர் | அ. இலவச விநியோகம் இல்லை |
| | இருமாத உபயோக அளவு | ஆ. இலவச சலுகை நீங்கலாக அதிகப்படி விநியோகம் ஒவ்வொரு1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1. | 50000 லிட்டர் வரை | ரூ. 4.50 | ரூ. 5.25 |
| 2. | 50001-100000 லிட்டர் வரை | ரூ. 6.00 | ரூ. 6.00 |
| 3 | 100001-150000 லிட்டர் வரை | ரூ. 8.00 | ரூ. 8.00 |
| 4 | 150000 லிட்டருக்கு மேல் | ரூ. 10.00 | ரூ. 11.00 |
| | | இ. இருமாத குறைந்த பட்ச கட்டணம் ரூ. 120.00 | இ. இருமாத குறைந்த பட்ச கட்டணம் ரூ. 900.00 |

(ஆ) வீட்டு உபயோகம் அல்லாத வணிக முறையில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புக்கு உண்டான குடிநீர் கட்டண விபரம்.

| வரிசை எண் | நீர் விநியோக முறை | வீட்டின் குழாய் இணைப்பிற்கு | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம். எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு |
|---|---|---|---|
| அ | வீட்டு உபயோகம் அல்லாத பிற காரியங்களுக்கு | அ. இலவச விநியோகம் இல்லை | அ. இலவச விநியோகம் இல்லை |
| | இருமாத உபயோக அளவு | ஆ. ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு | ஆ. ஒவ்வொரு 1000 லி ட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
| 1. | 50000 லிட்டர் வரை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| 2. | 50001-100000 லிட்டர் வரை | ரூ. 13.50 | ரூ. 13.50 |
| 3 | 100001-150000 லிட்டர் வரை | ரூ. 18.00 | ரூ. 18.00 |
| 4 | 150000 லிட்டருக்கு மேல் | ரூ. 22.50 | ரூ. 22.50 |
| | | இ. இருமாத குறைந்த பட்ச கட்டணம் ரூ. 525.00 | இ. இருமாத குறைந்த பட்ச கட்டணம் ரூ. 1350.00 |
| குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ. 50.00 |
| குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.50.00 |
| | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.60.00 |

<u>நகராட்சிகள் நிர்வாக தலைமை பொறியாளரால் தற்போது திருத்தி வழங்கப்பட்டுள்ள நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய குடிநீர் கட்டண விபரம்</u>

**<u>அட்டவணை 2</u>**

**(அ) வீட்டு உபயோக முறையில் வழங்கப்படும் குடிநீர் கட்டண விபரம்.**

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனங்¦கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| அ | வீட்டு உபயோகம் | குடிநீர் விநியோகம் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | ஒருமாத உபயோக அளவு | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| 1. | 7500 லிட்டர் வரை | ரூ. 3.50 | ரூ. 4.50 | ரூ. 3.50 | ரூ. 5.25 |
| 2. | 7501 – 10000 லிட்டர் வரை | ரூ. 4.00 | ரூ. 6.00 | ரூ. 4.00 | ரூ. 6.00 |
| 3. | 10001 – 150000 லிட்டர் வரை | ரூ. 5.00 | ரூ. 8.00 | ரூ. 5.00 | ரூ. 8.00 |
| 4. | 150000 லிட்டருக்கு மேல் | ரூ. 6.50 | ரூ. 11.00 | ரூ. 6.50 | ரூ. 11.00 |
| | | ஒருமாத குறைந்தபட்ச கட்டணம் | | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | | ரூ. 80.00 | ரூ. 120.00 | ரூ.600.00 | ரூ. 900.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ. 1000 | ரூ. 5000 | ரூ.3000 | ரூ.10000 |

(ஆ) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்கப்படும் குடிநீர் கட்டண விபரம்.

| வரிசை எண் | குடிநீர் விநியோக முறை | வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு | | பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு | |
|---|---|---|---|---|---|
| ஆ | வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | |
| | ஒருமாத உபயோக அளவு | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| 1. | 7500 லிட்டர் வரை | ரூ. 7.00 | ரூ. 10.50 | ரூ. 7.00 | ரூ. 10.50 |
| 2. | 7501 – 10000 லிட்டர் வரை | ரூ.9.00 | ரூ. 13.50 | ரூ.9.00 | ரூ. 13.50 |
| 3. | 10001 – 150000 லிட்டர் வரை | ரூ.12.00 | ரூ. 18.00 | ரூ.12.00 | ரூ. 18.00 |
| 4. | 150000 லிட்டருக்கு மேல் | ரூ.15.00 | ரூ. 22.50 | ரூ.15.00 | ரூ. 22.50 |
| | | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | | ஒருமாத குறைந்த பட்ச கட்டணம் | |
| | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | | ரூ. 350.00 | ரூ. 525.00 | ரூ. 900.00 | ரூ. 1350.00 |
| | குடிநீர் கட்டண வைப்புத் தொகை | ரூ. 3000 | ரூ. 10000 | ரூ.3000 | ரூ.15000 |
| | | | | பழைய கட்டண விகிதம் | திருத்திய கட்டண விகிதம் |
| | குழாய் முறையில் குடிநீர் வீட்டு உபயோகத்திற்கு | ஒவ்வொரு குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ. 50.00 | ரூ. 50.00 |
| | குழாய் முறையில் கிணற்று நீர் வீட்டு உபயோகத்திற்கு | 1. குழாய் இணைப்பு ஒன்றிற்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.50.00 | ரூ. 50.00 |
| | | 2. கூடுதல் குழாய் இணைப்பு ஒவ்வொன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | | ரூ.60.00 | ரூ. 60.00 |

மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிநீர் கட்டணத்தில் 10% உயர்த்தி அமைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் பில்லூர் II குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும் முன்னரே இத்திட்டத்திற்காக நிதி ஆதாரச் சான்றில் குறிப்பிட்டுள்ளவாறு வைப்புத்தொகை குடிநீர் கட்டணங்கள் மாற்றப்பட்டு அதற்கான ஒப்புதல் பெற்று மன்றத் தீர்மானம் இயற்றப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக அலுவலகம் நிபந்தனை விதித்து பொது அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த உத்தேச கட்டண விகிதத்திருத்தத்தை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து அமுல்படுத்தவும் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே குடிநீர் கட்டணத்தினை நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளபடி, திருத்தம் செய்யவும் குடிநீர் விநியோக உபவிதிகள் திருத்தத்தினை அமுல்படுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1 இணைப்பில் கண்டுள்ளபடி திருத்தியமைக்கப்பட்ட “கோயம்புத்துார் மாநகராட்சி குடிநீர் விநியோக வரைவு துணை விதிகள்” –ற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டம் இதுநாள் வரை இல்லாமல் இருந்து, இத்திட்டத்திற்கென நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ.113.74 கோடியில் 70 சதவீத மானிய நிதிபோக மீதமுள்ள 30 விழுக்காடு மாநகராட்சி பங்கு தொகையுடன் நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக ஒப்பந்த மதிப்பீட்டு தொகையும் மாநகராட்சி செலவழிப்பதால் கூடுதல் நிதி சுமை ஏற்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தினை ஈடு செய்யவும் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான குடிநீர் கட்டண விகிதத்தினை மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, அட்டவணை 2-ல் உள்ளவாறு குடிநீர் கட்டண விகிதங்களுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. குடிநீர் விநியோக விதி மற்றும் குடிநீர் விநியோக உபவிதிகளின்படி குடிநீர் கட்டண விகிதங்களை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

4. திருத்தியமைக்கப்பட்ட குடிநீர் விகிதங்களை 01.04.2010-ம் தேதி முதல் அமுல்படுத்த மாமன்ற ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 4848/2009/கு.வி.2

<u>மாநகர மன்ற தீர்மனம் எண் 173 நாள் 29.12.2009</u>

1. வீட்டு உபயோக (domestic) முறையில் வழங்கப்படும் குடிநீருக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் மாற்றி அமைத்து நிர்ணயம் செய்யலாமென தீர்மானிக்கப்பட்டது.

அ) வீட்டு உபயோக குடிநீர் குழாய் இணைப்பிற்கு மாதாந்திர குறைந்தபட்ச கட்டணமாக பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 120/- க்குப் பதிலாக குறைந்த பட்ச கட்டணமாக ரூ 100/- என நிர்ணயம் செய்யலாமென தீர்மானிக்கப்பட்டது.

ஆ) வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு ஒருமாத உபயோக குடிநீர் அளவின் அடிப்படையில் கீழ்க்கண்ட விகிதத்தில் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது

| | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
|---|---|---|
| i) | 15,000 லிட்டர் வரை | ரூ. 100/- (குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம்) |
| ii) | 15,001 முதல் 20,000 லிட்டர் வரை | ரூ. 6/- |
| iii) | 20,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ. 8/- |
| iv) | 1,50,000 லிட்டருக்கு மேல் | ரூ. 10/- |

இ) வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு குடிநீர் கட்டண வைப்புத் தொகையாக ரூ. 5000/- நிர்ணயம் செய்யலாமென தீர்மானிக்கப்பட்டது.

2) வீட்டு உபயோக (domestic) முறையில் பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் (bulk supply) 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அ) மாதாந்திர குறைந்தபட்ச கட்டணமாக ரூ 900/- நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஆ) அடுக்குமாடி வீட்டு உபயோக (domestic) முறையில் குடிநீர் விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குடிநீர் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யலாமென தீர்மானிக்கப்பட்டது.

| | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
|---|---|---|
| i) | 7,500 லிட்டர் வரை | ரூ. 5.25/- |
| ii) | 7,501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ. 6.00/- |
| iii) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ. 8.00/- |
| iv) | 1,50,000 லிட்டருக்கு மேல் | ரூ. 11.00/- |

இ) குடிநீர் கட்டண வைப்புத்தொகையாக ரூ. 10,000/- நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

3) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் (non domestic) வழங்கப்படும் குடிநீருக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அ) வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு மாதாந்திர குறைந்தபட்ச கட்டணமாக ரூ 525/- நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஆ) வீட்டு உபயோக குழாய் இணைப்பிற்கு ஒருமாத உபயோக குடிநீர் அளவில் அடிப்படையில் கீழ்க்கண்ட விகிதத்தில் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
|---|---|---|
| i) | 7,500 லிட்டர் வரை | ரூ. 10.50/- |
| ii) | 7,501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ. 13.50/- |
| iii) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ. 18.00/- |
| iv) | 1,50,000 லிட்டருக்கு மேல் | ரூ. 22.50/- |

இ) குடிநீர் கட்டண வைப்புத்தொகையாக ரூ. 10,000/- நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(4) வீட்டு உபயோகம் அல்லாத முறையில் (non domestic) பொது நிறுவனங்கள் முதலியவற்றிற்கு மொத்த விநியோகம் (bulk supply) 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அ) மாதாந்திர குறைந்தபட்ச கட்டணமாக ரூ 1350/- நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஆ) மொத்த விநியோகம் 20 எம்.எம். விட்டத்திற்கு அதிக அளவிலான குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| | ஒருமாத உபயோக அளவு | ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் |
|---|---|---|
| i) | 7,500 லிட்டர் வரை | ரூ. 10.50/- |
| ii) | 7,501 முதல் 10,000 லிட்டர் வரை | ரூ. 13.50/- |
| iii) | 10,001 முதல் 1,50,000 லிட்டர் வரை | ரூ. 18.00/- |
| iv) | 1,50,000 லிட்டருக்கு மேல் | ரூ. 22.50/- |

இ) குடிநீர் கட்டண வைப்புத்தொகையாக ரூ. 15,000/- நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

**(5) கட்டணம் வசூலிக்கத் துவங்கும் நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டணத்தில் 10% உயா்வு செய்து வசூலிக்க ஒப்புதல் வழங்க தீா்மானிக்கப்பட்டது.**

**(6) கோயம்புத்தூா் மாநகராட்சி குடிநீா் விநியோக வரைவு துணை விதிகளுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்க தீா்மானிக்கப்பட்டது.**

**7) திருத்தியமைக்கப்பட்ட குடிநீா் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை விகிதங்கள் உள்ளடங்கிய குடிநீா் விநியோக துணை விதிகளுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ள தீா்மானிக்கப்பட்டது.**

**8) திருத்தியமைக்கப்பட்ட குடிநீா் கட்டண விகிதங்கள் மற்றும் வைப்புத்தொகை விகிதங்கள் உள்ளடங்கிய குடிநீா் விநியோக துணை விதிகளை விளம்பரப்படுத்தி, பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாமென தீா்மானிக்கப்பட்டது.**

**9. திருத்தியமைக்கப்பட்ட குடிநீா் கட்டண விகிதங்களை 1.10.10 முதல் வசூலிக்கவும் தீா்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயா்**
**கோயம்புத்தூா் மாநகராட்சி**

---

## பொருள் எண் 35

**பொருள்:** **வருடாந்திர உரிமம் - கோயம்புத்தூா் மாநகராட்சி – வடக்கு மண்டலம் குத்தகை இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்வது – தொடா்பாக.**

************

**கோயம்புத்தூா் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களை 2010-2011, 2011-2012 மற்றும் 2012-2013 மூன்று ஆண்டிற்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி நடத்தப்பட உள்ளது.**

**ஏல இனங்கள்**

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல இனங்கள் | |
|---|---|---|
| 1. | நவீன பொதுக் கழிப்பிடம் - கணபதி கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 2. | நவீன பொதுக் கழிப்பிடம் - சீனிவாசபுரம், காந்திபுரம், கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 3. | சத்தி ரோடு புல்மாா்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 4. | சத்தி ரோடு ஆடு, மாடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 5. | ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் ஆம்னி பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | |
| 6. | நவீன பொதுக் கழிப்பிடம் சத்திரோடு ஆம்னி பேருந்து நிலைய கட்டணம் வசூலிக்கும் உரிமையை தனியாா் பங்களிப்புடன் பராமரிக்கலாம். | பேருந்து நிலையங்களில் உள்ள நவீன கழிப்பிடங்கள் மட்டும் தனியாா் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.பேருந்து நிலையம் மாநகராட்சி துப்புரவு பணியாளா்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டிலிருந்து மாநகராட்சி ஆம்னி பேருந்து நிலையத்தில் சோ்த்து நவீன கட்டண கழிப்பிடங்களையும் பராமரித்து கொள்ளவும் பேருந்து நிலையங்களில் போதுமான காவலா்கள் நியமித்து பாதுகாப்பு செய்வதுடன் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும், மேலும் ஆம்னி பேருந்து நிலையம் மற்றும் கழிப்பறைகளுக்கு வா்ணம் செய்து தூய்மையாக வைத்துக் கொள்ளவும் தனியாா் பங்களிப்புடன் கழிப்பிடங்களை புதுப்பித்து கட்டிக் கொள்ளவும் அதற்கு தேவையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம். |

<u>புதியதாக சேர்க்கப்பட வேண்டிய இனங்கள்</u>

| | |
|---|---|
| 1. | காந்திபுரம், சீனிவாசபுரம் - இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2. | சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் நவீன கட்டண கழிப்பிடம் |

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.48233/06/ஆர்.3, நாள்.13.02.2009-ல் ஏல இனங்களை மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளிகள் மூலம் ஒப்படைப்பு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட இனங்களை 2010-2011 முதல் மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்படைப்பு செய்யலாம். மேற்படி செய்யப்பட்ட குத்தகை இனங்களை அரசாணை (நிலை) எண்.78, நாள்.25.05.09 தெரிவித்துள்ளபடி வருடாந்தர குத்தகை இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை தற்போது நடைமுறையில் உள்ள ஓராண்டுக்கு பதிலாக மூன்றாண்டுகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கலாம்.

- உரிமையாணை இனங்களை ஒப்படைக்கும் தேதி முதல் 30.03.2013 முடிய (10-11, 11-12, 12-13) மூன்று நிதியாண்டு காலத்திற்கு ஏலம் விடலாம்.

- மேற்படி இனங்கள் அனைத்திற்கும் ஆண்டு உரிமை தொகை அடிப்படையில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும்.

- ஆரம்பத்தில் ஏலத்தில் பெறப்படும் உரிமத் தொகைகள் இரண்டாம் ஆண்டில் 5% சதவீத உரிமத் தொகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டு உரிமத் தொகையில் 5% உரிமத் தொகை உயர்வு செய்யப்படும்.

- மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் உரிமதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு அவ்வுரிமம் வழங்கப்படும். வாரிசுதாரர்கள் விருப்பம் இல்லையெனில் அவ்வுரிமம் மறு ஏலம் விடப்படும்.

- முதல் வருட உரிம தொகை முழுவதையும் உரிமம் உறுதி செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். இரண்டாம் ஆண்டு உரிம தொகையினை முதலாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மூன்றாம் ஆண்டு உரிம தொகையினை இரண்டாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் உரிமத் தொகை செலுத்தாவிடில் இம்மாநகராட்சியின் 2010-2013 ஆம் வருட உரிம இனங்களுக்கான ஏல நிபந்தனைகளில் கண்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏலதாரர் பொறுப்பில் மறு ஏலம் விடப்படும்.

- உரிமதாரர்கள் செலுத்திய வைப்பு தொகைகளை மூன்று வருட உரிம காலம் முடிந்த பின்னரே திரும்பி வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி அரசாணையில் தெரிவித்துள்ள விபரங்களை மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகளில் சேர்க்கலாம். மேலும் ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளில் கீழ் குறிப்பிட்டுள்ளபடி மாற்றம் செய்யலாம்.

- இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்படும் அனைத்து வாகனம் நிறுத்தும் இடங்களுக்கும் வசூலிக்கப்படும் கட்டணமானது 6 மணி நேரத்திற்கு மட்டும் பொருந்தும். அதன் பிறகு நிறுத்தப்படும் ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் முறையே கட்டணம் வசூலிக்கப்படும்.

- உரிமம் பெற்றவர் மாநகராட்சிக்கு ஏல நிபந்தனைகளை ஏற்று கொண்டதற்கிணங்க அளிக்கப்படும் ஒப்பந்த பத்திரம் ரூ.20/- மதிப்புள்ள முத்திரை தாளில் அளிப்பதற்கு பதிலாக ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் பெறலாம்.

மேற்படி 2009-2010 ஆம் ஆண்டு ஏல இனங்களில் வரிசை எண்.1 முதல் 6வரையிலான வருடாந்திர உரிம இனங்களுடன் புதிதாக சேர்க்கப்பட்ட இரண்டு இனங்களையும் 2010-2013ஆம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மேற்படி ஏல நிபந்தனை அறிக்கையினை 200 பிரதிகள் அச்சிட்டுப் பெறவும், மாவட்ட அரசிதழ் பதிவில் வெளியிடவும் ஏற்பாடு செய்யலாம். மேலும் ஏல அறிக்கையினை நாளேடுகளில் விளம்பரம் செய்து இவைகளுக்காகும் செலவினங்களை ஏற்கலாம்.

இப்பொருளின் மீது வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண். 16 நாள் 18.12.2009ல் புதிதாக சோ்க்க வேண்டிய இனங்கள் 1. காந்திபுரம் சீனிவாசபுரம் இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. 2. சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் கட்டணக்கழிப்பிடம் வசூலிக்கும் உரிமை ஆகியவற்றிற்கு மட்டும் நிதிக்குழுவில் அனுமதிக்கப்பட்டு தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 12974/2009/அ7(வ)

**<u>மாநகர மன்ற தீா்மனம் எண் 174 நாள் 29.12.2009</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 16 நாள் 18.12.2009ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 36

மாவட்ட ஆட்சியாளரின் மக்கள் குறை தீா்க்கும் மனுக்கள் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் மக்கள் குறைதீா்க்கும் மனுக்கள் மற்றும் ஆணையா் அவா்களின் மக்கள் குறைதீா்க்கும் மனுக்களில் கோயம்புத்தூா் மாநகராட்சியின் சாலையோரத்தில் பெட்டிக்கடைகள் வைத்து அனுமதி கோரி உடல் ஊனமுற்றவா்கள் மற்றும் மகளிா் சுய உதவிக் குழுக்கள் ஆகியோரிடமிருந்து மனுக்கள் பெறப்படுகின்றன. போக்குவரத்து கருத்தில் கொண்டும், பாதசாரிகளின் நலனை கருத்தில் கொண்டும் சாலையோரத்தில் கடைகள் நடத்த கோவை மாநகராட்சி அனுமதி வழங்குவதில்லை.

எனவே, மாநகராட்சி கடைகளில் உடல் ஊனமுற்றோருக்கு 2% கடைகளையும், மகளிா் சுய உதவிக்குழுவிற்கு 2% கடைகளையும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழக்கமான ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதியுடன் அரசின் அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில், குழு தனது தீா்மான எண். 8, நாள் 18.12.2009ம் தேதிய தீா்மானத்தில் உடல் ஊனமுற்றோா்க்கு 10% -ம் மகளிா் சுய உதவிக் குழுவிற்கு 5% -ம் ஒதுக்கீடு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது என தீா்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 12972/2009/ஏ7 (வ)

**<u>மாநகர மன்ற தீா்மனம் எண் 175 நாள் 29.12.2009</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 8 நாள் 18.12.2009ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கவும், அரசுக்குப் பரிந்துரை செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

**பொருள் எண் 37**

பொருள் : உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகரை மேம்படுத்துதல் - உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - சம்பந்தமாக.

-------------------

கோவை மாநகரில் வரும் 2010-ம் ஆண்டு ஜுன் 23 முதல் 27 வரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதையொட்டி கோவை மாநகராட்சி மூலம் ரூ112.85 கோடி மதிப்பிலான பணிகள் செய்ய கீழ்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| சுருக்கம் | | |
|---|---|---|
| வ.எண். | விபரம் | தொகை உத்தேசமாக (ரூ இலட்சத்தில்) |
| 1 | மாநகராட்சி பொதுநிதி மூலம் செயல்படுத்தப்படவுள்ள பணிகள் (பள்ளி கட்டிடங்கள், நிர்வாக கட்டிடங்கள், மத்திய மற்றும் நகர பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல், புதியதாக பூங்கா உருவாக்குதல், புதிய தெருவிளக்குகள் கம்பங்களுடன் அமைத்தல் மற்றும் உயர்மட்ட கோபுர விளக்குகள் அமைத்தல், மாநாடு மற்றும் ஊர்வலம் நடக்கும் பகுதிகளில் குடிநீர் வசதிகள் செய்தல்) | 2360.75 |
| 2 | அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள பணிகள் (பள்ளிகளில் உள்ள கழிவறைகள் மேம்படுத்துதல், மாநகராட்சி திருமண மண்டபங்கள் மேம்படுத்துதல், தற்காலிக துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துதல், புதியதாக நடமாடும் கழிவறை வாகனங்கள் வாங்குதல், பொது கழிப்பிடங்கள் மேம்படுத்துதல் மற்றும் பிரதான சாலையிலிருந்து மாநாடு நடைபெறும் இடத்திற்கு செல்லும் இணைப்பு மற்றும் அணுகு சாலைகளை புதுப்பித்தல்) | 3317.08 |
| 3 | பொது மக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ள பணிகள் (போக்குவரத்து திடல்கள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், மேட்டுப்பாளையம் சாலை, அவினாசி சாலை, திருச்சி சாலை மற்றும் சத்தி சாலைகளில் பாதசாரி நடைபாதைகள் அமைத்தல் , ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் கட்டண முறை கழிப்பிடங்களுக்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்) | 5606.80 |
| | மொத்தம் | 11284.63 |

மேற்படி உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகளில் அவினாசி சாலையில் தனியார் பங்களிப்புடன் ரூ 30.65 கோடி மதிப்பிலான பாதசாரி நடைபாதை அமைத்தல் பணியை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த கால அவகாசம் மிகவும் குறைவாக உள்ளதாலும், பணியை விரைவாகவும் செம்மையாகவும் செய்ய வேண்டியுள்ளதால் தனியார் பங்களிப்பை தவிர்த்து மாநகராட்சி பொதுநிதியின் மூலம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியும், மேற்படி பணிக்கான நிதியை மாநகராட்சி திருத்திய வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்து கொள்ளவும், மேலும் பந்தய சாலையில் நடைபாதை பூங்காவுடன் அலங்கார விளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்தேசமாக ரூ 2.00 கோடி மதிப்பில் தனியார் பங்களிப்புடன் (PPP Mode) செயல்படுத்தப்படுத்தவும் மேற்படி உத்தேச திட்டத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ள வளாகம் அவினாசி சாலையில் அமைந்துள்ளது. மேற்படி சாலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவசர அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் மாநாடு நடைபெறும் நாள் மிக குறுகிய காலம் அவகாசமே உள்ளதாலும் மேற்படி அவினாசி சாலையின் இருபுறமும் நடைபாதை மற்றும் அலங்கார அமைப்புகள் அமைக்கும் பணியினை இம்மாநகராட்சியின் பொதுநிதியின் மூலமோ அல்லது தனியார் பங்களிப்புடனோ (Public Private Partnership Basis) மேற்கொள்ளலாம், மேற்படி பணியினை மாநகராட்சியின் நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் பட்சத்தில் அதற்குண்டான செலவினத்தை இம்மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொண்டு பின்நாளில் அதனை அரசினரிடமிருந்து மானியமாக கேட்டுப் பெறலாம்.

ந.க.எண்.12359 / 2009/ எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 176 நாள் 29.12.2009</u>

அலுவலகக் குறிப்பினை ஏற்று உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, அவினாசி சாலையின் இருபுறமும் நடைபாதை, அலங்கார அமைப்புகள் முதலிய வசதிகள் அமைக்கும் பணியினை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடனோ (PPP) அல்லது மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. மாநகராட்சி நிதியிலிருந்து பணி மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இப்பணிக்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொண்டு, பின்னர் அரசிடமிருந்து மானியமாக கோரிப் பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பாக மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டியுள்ளதால் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாநகர மேம்பாட்டுக்குழுத் தலைவர் அவர்களுக்கு பணி மேற்கொள்ள முன்அனுமதி வழங்கும் அதிகாரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி